விலை ரூபா: 10.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 10 ஞாயிற்றுக்கிழமை (23.04.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 125

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## கிளைமோர்களில் சிக்கி 4 இராணுவத்தினர் பலி

(வவுனியா)

இராணுவத்தினை இலக்கு வைத்து நேற்று வவுனியாவிலும் மட்டக்களப்பிலும் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த்தாக்குதல்களில் ஒரு அதிகாரி உட்பட நான்கு இராணுவத்தினர் உயிரிழந்தனர். 8பேர் படுகாயமடைந்தனர்.

வவுனியா கல்மடுப் பகுதியில் நடத்தப்பட்ட இரு வேறு கிளைமோர்த்தாக்குதல்களில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 7பேர் காயமடைந்தாகவும் வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

கல்மடு வீதி தேவர்குளத்தில் சுற்றுக் காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த்தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். இன்னொரு சிப்பாய் சிறுகாயங்களுக்குள்ளானார்.

அதேபகுதியில் இராணுவத்தினர் பயணம் செய்த கவசவாகனம் ஒன்றின் மீது நேற்று மாலை 4.45மணியளவில் நடாத்தப்பட்ட மற்றுமோர் கிளைமோர்த்தாக்குதலில் இரண்டு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். 6பேர் காயமடைந்தனர்.

இதேவேளை மட்டக்களப்பு-பொலநறுவைமாவட்ட எல்லைக் கிராமமான சிங்கபுரப் பகுதியில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்டோச் சாரதிகள் இருவர் நெல்லியடியில் சுட்டுக்கொலை

(துன்னாலை)

வடமராட்சி ஆட்டோ சங்கத்தலைவர் உட்பட இரு ஆட்டோச் சாரதிகள் நேற்று மாலை 5.15 மணியளவில் நெல்லியடி நகரப்பகுதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

நெல்லியடி நகரப் பகுதியில் இருவரும் நின்றிருந்த வேளை மோட்டார் சைக்களில் வந்தோர் இவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்து விட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

நெல்லியடி கரவெட்டி இராஜகிராமத்தைச் சேர்ந்த வடமராட்சி ஆட்டோ சங்கத்தலைவரும் இரண்டு பிள்ளைகளின் தந்தையுமான சுப்பிரமணியம் வசீகரன் (வயது 28) இவருடன் பேசிக்கொண்டிருந்த தனியார் பஸ் நடத்துநரும் ஆட்டோச் சாரதியுமான இரத்தினம் ஜசிந்தன் (வயது 24) ஆகிய இருவருமே சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர்.

சூட்டுக்கு இலக்காகி மரணமானவர்களின் சடலம் பருத்தித்துறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அப்பகுதி எங்கும் பதற்றம் நிலவுகின்றது. கடைகள் அனைத்தும் உடனடியாக மூடப்பட்டன. இதேவேளை மரணமானவரின் ஆட்டோ நெல்லியடிப் பொலிஸாரால் எடுத்துச்செல்லப்பட்டது. (சு-15,35.101)

# புலிகளின் பயணத்திற்கு ஹெலி அரசாங்கம் இணக்கம் தெரிவிப்பு

### சமாதான செயலகப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதிகள் பயணம் செய்வதற்கு 10 பேர் பயணம் செய்யக்கூடிய ஹெலிகொப்டர் ஒன்றை வழங்குவதற்கு அரசாங்கம் இணங்கியுள்ளது.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கான நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் நேற்றுமாலை அரச சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கோகன்னவைச் சந்தித்தபோது மேற்படி இணக்கம் வழங்கப்பட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பகுதியில் கிளைமோர் இரண்டு இளைஞர்கள் உயிரிழப்பு

(மன்னார்)

மன்னாரில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான மடு வீதிப்பகுதியில் நேற்று இடம்பெற்ற கிளைமோர்த்தாக்குதலில் இரு இளைஞர்கள் கொல்லப்பட்டதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

பரப்புக்கடந்தான் மடு வீதி பெரியவில் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தவர்களை இலக்கு வைத்து நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் தம்பையா ஜேசுதாஸ், யோகநாதன் சர்வேந்திரன் ஆகிய இருஇளைஞர்களே உயிரிழந்தவர்களாவர்.

இராணுவத்தினரின் ஆழ ஊடுருவித் தாக்கும் அணியினரே தாக்குதலை மேற்கொண்டதாக விடுதலைப்புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (சு-4)

## முடிவுகள் எதுவுமற்ற ஹென்றிக்சனின் விஜயம் சந்திப்பை இடை நிறுத்தினார் தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் சந்தித்துக் கலந்துரையாடாது கொழும்பு திரும்பினார்.

கண்காணிப்புக்குழுத் தலைவர் ,நோர்வேயின் சிறப்புத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் ஆகியோருடனான சந்திப்புக்களில் தெரிவிக்கப்பட்ட விடயங்களுக்கு ஏற்ப விடுதலைப்புலிகளின் கிழக்குத் தளபதிக்ளின் கிளிநொச்சிப் பயணத்திற்கு விடுதலைப்புலிகளினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு எதனையும் அவர் கொண்டுவராத காரணத்தினால் தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பு நடைபெறவில்லை என தெரிவிக்கப்பட்டது.

கடந்த நான்கு வருட போர்நிறுத்தக் காலத்தில் கிழக்குத் தளபதிகளின் பயணத்திற்கு இரு தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விமானப்படையினரின் உலங்கு வானூர்தி அல்லது விடுதலைப்புலிகளின் கடற்கலன்களைப் பயன்படுத்தி பயண ஒழுங்கு இடம் பெற்று வந்தது. மகிந்தவின் அரசாங்கம் இந்த நடைமுறைகளை காரணம் ஏதும் இன்றி மறுத்தது. தளபதிகளுக்குரிய பயண ஒழுங்குகளை இழுத்தடித்து வருகின்றது.

கிழக்கில் இருக்கும் விடுதலைப்புலிகளின் பொறுப்பாளர்களை அழைத்து வருவதற்கு தனியார் உலங்கு வானூர்திகளை பயன்படுத்தலாம் என்று அரசாங்கம் ஒரு யோசனையைத் தெரிவித்திருந்தது.

ஆனால் நேற்றுக் காலை விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப்பணிப்பாளர் புலித்தேவனுக்கும் கண்காணிப்புக்குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சனுக்குமிடையில் நடைபெற்ற சந்திப்பில் இது நிராகரிக்கப்பட்டது. இதனையடுத்து கண்காணிப்புக்குழுவின் தலைவர் உல்ப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சீனன்குடாவில் நள்ளிரவில் தமிழ்ப்பெண் சுட்டுக்கொலை

(திருகோணமலை)

திருகோணமலை சீனன்குடாவில் தமிழ்ப் பெண் ஒருவர் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளார். அவரது கணவர் படுகாயமடைந்துள்ளார். பலியானவர் கந்தசாமி நல்லம்மா (வயது 49) என அடையாளம் காணப்பட்டார்.

அவரது கணவர் பசுபதிப்பிள்ளை கந்தசாமி (வயது 50) என்பவரே படுகாயமடைந் தவராவார். சமன்புர மற்றும் தனியகமவுக்கு இடைப்பட்ட தமிழர் மீள்குடியேற்ற பிரதேசமான சீனன்குடாவில் இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

காவற்றிக்குடாப் பிரதேசம் சீனன்குடாவில் உள்ள கந்தசாமி இல்லத்திற்கு இரவு வெள்ளைவானில் (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:
021 - 222 3891, 222 6297, 077 - 2349999,
011 - 2372952/3, 011 - 2360290/1
e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.


எக்ஸ்போ.ஏயார்

வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# லண்டன் 'தமிழ் மஞ்சரி' நடாத்திய சுனாமி கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்றவர்கள்

**தரம்1 -ஆண்கள்**

முதலாம் பரிசு:-செல்வன் ஸ்ரீ இராஜேஸ்வரன் ரகுராஜ்
யா/உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரி
இரண்டாம் பரிசு:-செல்வன் முரளிதரன் கபிலேஷன்
தி/இ.கி.ச.ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி
மூன்றாம் பரிசு:-செல்வன்.மு.ச.முகம்மது நி.'.ப்கி
மட்/ஹிழ்றியா வித்தியாலயம்

**தரம்1 -பெண்கள்**

முதலாம் பரிசு:-செல்வி ஜெனி.'.பர் ஐதிசினி சண்முகராஜா
திருக்குடும்ப் கன்னியர்மடம், கொழும்பு 04
இரண்டாம் பரிசு:-செல்வி ர.சர்மிலி
சென் மேரீஸ் கல்லூரி, திருகோணமலை
மூன்றாம் பரிசு:-செல்வி எம்.எ.'.ப்.ஜபஸ்ரா ஷிறீன்
மட்/மில்லத் மகளிர் வித்தியாலயம், காத்தான்குடி

**தரம்2 -ஆண்கள்**

முதலாம் பரிசு:-செல்வன் சுசிதரன் விதுாஷன்
புனித மிக்கேல் தேசியப் பாடசாலை, மட்டக்களப்பு
இரண்டாம் பரிசு:-செல்வன்.லி.சிவானுஜன்
இந்துக்கல்லூரி-பம்பலப்பிட்டி
மூன்றாம் பரிசு:-செல்வன்.எம்.டபிள்யூ.முஹம்மது யாஸிர்
ஸாகிரா மத்திய கல்லூரி , தர்ஹா நகர்.

**தரம்2 -பெண்கள்**

முதலாம் பரிசு:-செல்வி ராகப்பிரியா செல்வராஜா
தி/ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி
இரண்டாம் பரிசு:-செல்வி.சனற் சஞ்சுவி அன்ரனி பிரான்சிஸ்
சென் மேரிஸ் கல்லூரி, திருகோணமலை
மூன்றாம் பரிசு:-செல்வி.சாகித்தியா இராதாகிருஷ்ணன்
தி/ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி

**தரம்3 -ஆண்கள்**

முதலாம் பரிசு:-செல்வன் கே.சக்திவேல்
சென் ...ில்வெஸ்டர் கல்லூரி, ...ண்டி
இரண்டாம் பரிசு:-செல்வன். முஹம்மது சஜபு பரினாஸ்
பொத்துவில் மத்திய கல்லூரி , பொத்துவில்
மூன்றாம் பரிசு:-செல்வன் ஏ.எல்.எம்.இம்றாஸ்
தாருக் கௌஹீத் கலாபீடம்
பறகஹதெனியா கு.'.வேவுட

**தரம்3 -பெண்கள்**

முதலாம் பரிசு:-செல்வி எம்.ஜே.யூ.ரமீலா
சென்மேரீஸ் முஸ்லிம் மகாவித்தியாலயம் நாவலப்பிட்டி
இரண்டாம் பரிசு:-செல்வி.ஜெமீலா அலிவ.'.பா
முஸ்லிம் மகளிர் மகாவித்தியாலயம்,
சீனன் கோட்டை-பேருவளை
மூன்றாம் பரிசு:-செல்வி.பாலச்சந்திரா பாலகௌரி
உடுவில்மகளிர் கல்லூரி

# ஈழத்து எழுத்தாளர்களுக்கு கைகொடுத்து உதவும் மணிமேகலை பிரசுராலயம்

## ரவி தமிழ்வாணனின் சிறப்புச் செவ்வி

ஈழத் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்களை அச்சுவாகனத் திலேற்றி உலகில் எங்கெங்கெல் லாம் தமிழ் மக்கள் வாழ்கிறார்



களோ அங்கங்கெல்லாம் அறிமுகப் படுத்தி வரும் மணிமேகலை பிரசுரா லயத்தின் அதிபரும் காலஞ்சென்ற பிரபல துப்பறியும் கதாசிரியரும், கல்கண்டு பத்திரிகை ஆசிரியரு மான தமிழ்வாணனின் இரண்டா வது புத்திரருமான ரவி தமிழ் வாணம் நேற்றையதினம் வலம்புரி அலுவலகத்துக்குத் திடீர் விஜய மொன்றை மேற்கொண்டார்.

தங்களது ஆக்கங்களை அச்சி லேற்றி பார்க்கமுடியாதா என்ற அங்கலாய்ப்புடன் இருந்த ஈழத் தமிழ் எழுத்தாளர்களுக்கு 'அஞ்சேல்' என அபயகரம் நீட்டியதோடு அவர் களதுபடைப்புக்களை அச்சு வாகனத் தில் ஏற்றியது மாத்திரமன்றி, அகில உலகமெங்கணும் பரவச் செய்த பெருமை மணிமேகலை பிரசுராலயத்துக்கு உண்டு.

புத்தகப் புதிப்புத் துறையில் 28ஆண்டு கால அனுபவமுள்ள மணிமேகலைப் பிரசுராலயம் இதுவரை ஈழத் தமிழ் எழுத்தாளர் களது 300க்கும் மேற்பட்ட நூல் களை வெளியிட்ட பெருமைக்கும் உரித்தானது. ஈழத்து எழுத்தா ளர்களை உள்ளடக்கிய இளம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற் காக எழுத்தாளர்- பதிப்பாளர் முத லீட்டுத் திட்டம் என்றவொரு திட் டத்தை கடந்த 5ஆண்டு காலமாக மணிமேகலை பிரசுராலயம் செயற் படுத்தி வருகிறது.

இதன்படி, ஈழத்து எழுத்தாளர் கள் 30ஆயிரம் ரூபாவை முதலீடு செய்தால், பிரசுராலயமும் 30 ஆயிரம் ரூபாவை முதலீடு செய்து 160பக்கங்களைக் கொண்ட 1000 பிரதிகளை அச்சிடுவார்கள். இதில் 300பிரதிகள் எழுத்தாள ருக்கு வழங்கப்படும். 300 பிரதிகள் தேவைப்படாத எழுத்தாளர்களுக்கு, அவர்களுக்குத் தேவைப்படும் பிரதிகளைக் கொடுத்தது போக, மிகுதிப் பிரதிகளை மணிமேகலை பிரசுராலயமே விற்றுப் பணமாக வழங்கும்.

ஈழத் தமிழ் எழத்தாளர்களது படைப்புகளுக்கு தமிழ் நாட்டில் வரவேற்பு எப்படியிருக்கிறது எனக் கேட்டதற்கு ரவி தமிழ்வாணன் பதிலளிக்கையில், வாசகர்களுக்கு இந்திய எழுத்தாள் - இலங்கை எழுத் தாளர் என்ற வேறுபாடு கிடையாது. நல்ல சரக்கு எங்கும் எப்போதும் விற்பனையாகும் எனத் தெரிவித் தார். நாங்கள் பதிப்பிக்கும் புத்த கங்களை தமிழக அரசின் பொது நூலகத்துறை வாங்கி தமிழ் நாட்டிலுள்ள 600நூல் நிலையங் களுக்கும் விநியோகிப்பதால் ஈழத் தமிழ் எழுத்தாளர்களின் பதிப்புகள் இதன்மூலம் பரவலா கிறது எனவும் கூறினார்.

வெளிநாடுகளில் வாழும் இலங்கை நன்கொடையாளர்களை அடையாளங் கண்டு அவர்கள் மூலம் கிடைத்த நன்கொடை மூலம் பெறப்பட்ட 5 இலட்சம் ரூபா பெறு மதியான நூல்களை யாழ். பொது நூலகம் முதலியவற்றுக்கு நன் கொடையாக வழங்கியுள்ளதாக வும் அவர் மேலும் தெரிவித் தார்.

தமிழினி வ.மா.குலேந்திரன் என்பவரால் தொகுக்கப்பட்ட 'தமிழ்-முஸ்லிம் அறிஞர்கள்' என்ற நூலை யாழ்ப்பாணப் பகுதியில் 250 பாடசாலைகளுக்கு அன்பளிப்பாக வழங்கவுள்ளதாக வும் ரவி தமிழ்வாணன் தெரிவித் தார்.

இன்று காலை வண்ணை நாவலர் வித்தியாலயத்தில் நடைபெறும் சைவப் புலவர்கள் மகாநாட்டில் மணிமேகலைப் பிரசுராலயத்தால் வெளியிடப்பட்ட சைவ சித்தாந்த கைநூல் என்ற புத்தகத்தை அம் மகாநாட்டுக்கு வரும் சைவப் புல வர்களுக்கு அன்பளிப்பாக வழங் கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

லண்டன் 'தமிழினி மஞ்சரி' நடாத்திய சுனாமி கட்டுரைப் போட் டியில் பரிசு பெற்றவர்களுக்கான ரொக்கப் பரிசு 31 ஆயிரம் ரூபா வில் ஒரு பகுதி கொழும்பில் வழங்கப்பட்டது போக மிகுதிப் பணம் இங்கு வழங்கப்படவுள்ள தாகவும் தெரிவித்தார். (லண்டன் 'தமிழினி மஞ்சரி' நடாத்திய சுனாமி கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்றோர் விபரம் தனியாக பிரசுரமாகிறது.)



தனது வாழ்க்கையின் பெரும் பகுதியை வெளிநாட்டுச் சுற்றுப் பிரயாணத்திலேயே செலவிட்ட ரவி தமிழ்வாணன் தனது சுற்றுப் பிரயாணத்தை மணிமேகலை பிரசுராலயத்தின் புத்தகங்களை பட்டி தொட்டியெல்லாம் பரப்பும் பணியிலேயே செலவிட்டுள்ளார்.

**◀ ராஜ் ▶**

ஈழத் தமிழ் எழுத்தாளர்களது நூல்களை அச்சிலேற்றி ஆவணப் படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ள ரவி தமிழ்வாணனின் தமிழ்ச் சேவையை தமிழ் கூறும் நல்லு லகம் என்றென்றும் மறக்கமாட் டாது. □

# இராசிபலன்

**23.04.2006**
**(சித்திரை 10 ,ஞாயிற்றுக்கிழமை)**
**தசமி பிற்பகல் 12.46மணிவரை**
**அவிட்டம் முற்பகல்8.39மணிவரை**
**இராகுகாலம் 4.30-6.00மணிவரை**
**சுபநேரம் 9.00-10.30மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | தனதானிய சேர்க்கை, சயனசுகம், நண்பர்கள் சந்திப்பு, குடும்ப சுகம். |
| இடபம் | சுபநிகழ்வு, தேகாரோக்கியம், பெரியோ ரால் மதிக்கப்படுதல், காரியசித்தி. |
| மிதுனம் | புத்திரரால் கவலை, பிரயாணம், முயற்சி தாமதம், கட்டுப்பாடு. |
| கடகம் | முழங்கால் வலி, பொருள்விரயம், மனக் கவலை, முயற்சி தாமதம். |
| சிங்கம் | தேகநலன், மனோதைரியம், செல்வாக்கு, முயற்சி கைகூடும். |
| கன்னி | தடைப்பட்ட காரியம் கைகூடும், வாக்கு மேன்மை, ஆரோக்கியம், சத்துருஜெயம் |
| துலாம் | பணக்குறைவு, அஜீரண ரோகம், கௌரவக்குறைவு, காரியதாமதம். |
| விருச்சிகம் | சுபசெலவு, மனச்சஞ்சலம், காரிய இடை யூறு, போசனசுகம். |
| தனுசு | மனோ தைரியம், உறவினர் வருகை, எடுத்த காரியம் கைகூடும், உற்சாகம். |
| மகரம் | கௌரவக் குறைவு, ரோகநிலை, மனோ சங்கடம், முயற்சி தாமதம். |
| கும்பம் | வெகுமானம், மாதர் நட்பு, போசனசுகம், சயனசுகம். |
| மீனம் | சோம்பல் நிலை, தனவிரயம், மரியாதைக் குறைவு, காரியதாமதம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
**-வளவன்**

## கலைப்பீடம் நாளை திறப்பு

கொழும்பு பல்க லைக்கழகத்தின் கலைப்பீடம் நாளை மீண்டும் திறக்கப்பட வுள்ளதுகலைப்பீடத் தினை மாணவர்சங் கத் தேர்தல் தொடர் பாக மாணவர்குழுக் களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் கார ணமாக கடந்த 7ஆம் திகதி கலைப்பீடம் மூடப்பட்டமை குறிப் பிடத்தக்கது.(க-9)

## மணிவிழாவும் மலர் வெளியீடும்

(பருத்தித்துறை)

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலையின் இளைப்பாறிய அதிபர் எ.நடராஜாவின் மணிவிழாவும், மலர் வெளியீடும் இன்று பிற்பகல் 3 மணிக்கு உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை திறந்த வெளி யரங்கில் மேற்படி பாடசாலை அதிபர் கே.தர்மலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் வாழ்த்துரையை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் கே.செல்வரத்தினம், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா, கர வெட்டி கோட்டக் கல்வி அதிகாரி கே.அம்பலவாணர், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் கே. அரிய ரத்தினம், பழைய மாணவர் சங்கச் செயலர் ரி.யோக சாமிஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

கனடாவில் வசிக்கும் பாடசாலையின் பழைய மாணவர் கலாநிதி த.வசந்தகுமார், பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் கே.பேரா னந்தம் , உயர்கல்வி அதிகாரியின் மேலதிக செயலர் எஸ்.தில்லைநடராஜா, பழைய மாணவர் சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி எம்.தங்கராஜா,செல்வன் கே.தனிரோஜன் ஆகியோர் பாராட்டுரைகளை நிகழ்த்த வுள்ளனர்.

மலர் அறிமுக உரையை பேராதனை பல்கலைக் கழக தமிழ்த்துறை உதவி விரிவுரையாளர் செ.சுதர் சனும், நூல் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக ஊடக வளத்துறைப் பணிப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ"ம் நிகழ்த்தவுள்ளார்கள்.

நடராஜாவின் ஏற்புரையை அடுத்து ப.கேதீஸ் வரன் நன்றியுரை நிகழ்த்துவார். (க-52)

## தென்னைகளுக்கு புதிய நோய்

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடல் பேரலைகளால் பாதிப்புக்குள் ளாகிய பிரதேசங்களில் 'மயிட்டியா' என்ற ஒருவகை நோய் தென்னை மரங்களைப் பீடித்திருப்பது கண்ட றியப்பட்டுள்ளது.

இந்நோயினால் பீடிக்கப்பட்ட தென்னைகளின் பாளைகள், தேங்காய்கள் கருகிக் காணப்படுகின் றன.

இதனால் தேங்காய்களுக்குத் தட்டுப்பாடு நிலவு வதுடன் விலையும் உயர்ந்து காணப்படுகிறது. (க-9)

## அடையாளம் காணப்படாத நிலையில் 3 சடலங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்லடி கடற்கரை யில் 35வயது மதிக்கத்தக்க இளை ஞரது சடலத்தை காத்தான்குடி பொலிஸார் கடந்த வியாழக்கிழமை மீட்டனர்.

பொது மக்களிடமிருந்து கிடைக் கப்பெற்ற தகவலையடுத்து கடற் கரைக்குச் சென்ற பொலிஸார் இரவு 7.30மணியளவில் சடலத்தை மீட்டு காத்தான்குடி மருத்துவமனை யில் ஒப்படைத்தனர்.

இதேவேளை கடந்த 18ஆம் திகதி யன்றும் கல்லடி பூநொச்சிமுனை யில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்க ளுடன் ஒருஇளைஞரது சடலமும் கடந்த 11ஆம் திகதி கல்லடி வே லூரில் 17வயது இளைஞரது சடலமும் மீட்கப்பட்டு மட்டக்களப்பு மருத்து வமனையில் ஒப்படைக்கப்பட்டது.

அடையாளம் தெரியாத இந்த சடலங்கள் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (க)

## திருநாவுக்கரசு நாயனார் குருபூசை விழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நல்லூர் ஸ்ரீ சட்டநாத ஸ்வாமி தேவஸ்தானத்தில் இன்று காலை 9.00மணியளவில் ஆலயப் பூசையைத் தொடர்ந்து மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின் பநாயகம் தலைமையில் திருநாவுக் கரவு சுவாமிகள் குருபூசை விழா நடைபெறவுள்ளது.

அப்பர் சுவாமிகளுக்கு விசேட பூசை தேவாரப் பாராயணம், சொற் பொழிவு ஆகிய நிகழ்வுகள் இடம் பெறும்.

மாலை 5.00மணியளவில் வண்ணார்பண்ணை கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயாகர் தேவஸ்தா னத்தில் நால்வர் பெருமக்களுக்கும் அபிஷேக ஆராதனை, அப்பர் சுவாமிகளின் அருட்பாடல்கள் பாராயணம்,சொற்பொழிவு ஆகிய நிகழ்வுகளுடன் முதலாம் திரு முறை முற்றோதல் பாராயணமும் இடம்பெறும். (க)

## கமநல சேவை நிலையம்

(மருதங்கேணி)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்கான கமநல சேவை நிலை யமொன்று அமைக்கப்படவுள்ளது.

கரணவாய் மூத்தநயினார் கோவில் பின்பகுதியிலுள்ள காணியில் அமைக்கப்படவுள்ள கரவெட்டி ஆயுர்வேத மருந்தகம், விவசாய ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றிற்கு அருகில் 80 இலட் சம் ரூபா செலவில் நிக்கொட்டின் நிதியுதவியுடன் இக் கட்டடம் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (த-35)

## கருத்தாடல் களம்

### உயிரை பணயம் வைக்கும் அரசியல்

இன்றைய உலகம் மனித உரிமைகள் பற்றி விவாதித்து வருகின்றன. இலங்கைத்தீவில் மனிதன் வாழ்வதற்கான உரிமை கூட இல்லை என்பதனை சம்பிக்க ரணவக்கவின் கூற்று புலப்புடுத்துகிறது.

[செய்தி : யாழ்பாணத்தில் உள்ள 40,000 படை வீரர்களை விடுதலைப்புலிகள் கொன்றால் 4 லட்சம் தமிழ் மக்களின் சவப்பெட்டிகளை நாங்கள் வன்னிக்கு அனுப்பி வைப்போம்]

40,000 படைவீரரும் சரி 4 லட்சம் மக்களும் சரி அரசியல்வாதிகளுக்கு என்னதான் செய்தார்கள் அவர்கள் செய்த ஒரே தவறு அரசியல்வாதிகளுக்கு வாக்களித்தமை, இல்லாவிட்டால் ஒரு அரசியல்வாதி மக்களின் உயிரை பணயம் வைக்க துணிவாரா?

பௌத்த தர்மத்தை காப்பதாக கூறி உருப்பெற்ற ஜாதிக ஹெல உறுமய மக்களின் உயிரைக் காக்க முன்வராமல் பணயம் வைக்க துணிவது ஏன்? இதற்கு காலந்தான் பதில் சொல்லும்.

"சிந்தனை"
யாழ்ப்பாணம்

### திருகோணமலை தாக்குதல் தனி நாட்டை நியாயப்படுத்துகிறது

திருகோணமலை தாக்குதல்கள் தமிழர்களின் போராட்டத்தின் காரணத்தை மிகத் தெளிவாக நியாயப்படுத்துகிறது. சுதந்திரத்தின் பின்னரான பல்வேறு சந்தர்ப்பங்களில் இவ்வாறு சிங்கள காடையர்களை ஏவி விட்டு தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்திய பல வன்முறை நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. நாற்பதுகளில் தொடங்கி இன்று வரை அவ்வப்போது காடையர்களை ஏவிவிட்டு தமிழ் மக்களை படுகொலை செய்கின்ற வரலாறு தொடர்ந்து வருகிறது.

அதன் தொடர்ச்சியாகவே திருகோணமலை படுகொலைகள் இடம்பெற்றிருக்கின்றன. பெண்கள் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர். இரு யுவதிகள் எரிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான தமிழர் மீதான வன்முறைகளானது விடுதலைப்புலிகளது ஆயுத ரீதியான தனிநாட்டுக் கோரிக்கையை நியாயப்படுத்துவதாகவே உள்ளது. ஒற்றை ஆட்சி என்றும், ஐக்கிய இலங்கை என்றும் வலியுறுத்துகின்றவர்களே அதற்கு எதிராக இங்கு செயற்பட்டுள்ளமை கண்கூடானது.

திகாம்பரம் பாரதி
திருகோணமலை

## அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

### உறுப்புரை - 25

1. ஒவ்வொருவருக்கும் உணவு, உடை, வீட்டு வசதி, மருத்துவக்கவனிப்பு, அவசியமான சமூக சேவைகள் என்பன உட்பட தமதும் தமது குடும்பத்தினரதும் உடனலத்துக்கும், நல்வாழ்வுக்கும் போதுமான வாழ்க்கைத்தரத்திற்கு உரிமையுடையவராவர். அத்துடன் வேலையின்மை, இயலாமை, கைம்மை,முதுமை காரணமாகவும் அவை போன்ற அவரது சட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட பிற சூழ்நிலை காரணமாகவும் வாழ்க்கைக்கு வழியில்லாமை ஏற்படும் சந்தர்ப்பங்களில் பாதுகாப்புக்கும் உரிமையுடையவராவர்.

# திருமலை வன்முறைகளும் சமாதானத்தின் எதிர்காலமும்



திருகோணமலையில் இடம்பெற்ற படுகொலைகள் முழுநாட்டிலும் வாழுகின்ற தமிழ் மக்களை கவலையில் ஆழ்த்தியுள்ளது. அதே சமயம் சமாதானத்தை விரும்புகின்ற பலருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பல்வேறு இழுபறிகளுக்கு மத்தியில் பல வருடங்களுக்கு பிறகு அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் ஜெனீவாவில் இடம்பெற்ற போதும் அவை சுமூகமாக அமைந்திருக்கவில்லை. அரச தரப்பு பிரதிநிதிகளும், விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளும் குற்றச்சாட்டுக்களை அடுக்கவும், அடுத்த தரப்பினரை பலவீனப்படுத்தவும் முயன்றிருந்ததாக விமர்சனங்கள் எழுந்திருந்தன.

இந்த நிலையில் ஜெனீவாவில் உடன்பாடு கண்டபடி துணைப்படைகளை கட்டுப்படுத்த அரசாங்கத்திற்கு முடியாமல் போயுள்ளமை பலத்த விமர்சனங்களை கிளப்பியுள்ளது.

ஜெனீவா பேச்சுக்களின் பின்னர் மிகக் குறுகிய காலம் தாக்குதல்கள் ஏதும் இல்லாமல் அமைதி காணப்பட்ட போதும் அது நீடிக்கவில்லை. குறிப்பாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளுக்குள் ஊடுருவிய ஆயுததாரிகள் தாக்குதல்களை நடத்தியிருந்தனர். அதேபோல வியாபாரிகள், விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் என பலர் கொல்லப்பட்டனர். இதன் தொடர்ச்சியாக திருமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை தலைவர் வி. விக்னேஷ்வரன் கொல்லப்பட்டமை பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியிருந்தது. மறைந்த ஜோசப் பரராஜசிங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு நியமிக்கப்படவிருந்த வி. விக்னேஷ்வரனின் படுகொலையானது தமிழ் மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது.

இதனைத்தொடர்ந்து மிருசுவிலில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் சிப்பாய்கள் கொல்லப்பட்டமை, தம்பலகாமத்தில் 10 கடற்படையினர் கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்டமை எனத்தொடர்ந்து யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா என தாக்குதல்கள் விரிவடைந்து சென்ற சூழலை அவதானிக்க முடிந்தது.

மேலும், விடுதலைப்புலிப்போராளிகள் மற்றும் தளபதிகளின் பயண விவகாரத்தில் ஏற்பட்ட இழுபறிகளைத்தொடர்ந்து புலிகள் ஜெனீவா பேச்சுக்களில் இருந்து விலகியதாக அறிவித்தமை ஆகியவை நிலமையை மிகவும் பாரதூரமாக மாற்றியுள்ளது.

எனவே மிக மோசமான, சமாதானத்திற்கு சாதகமற்ற சூழலிலேயே திருகோணமலை படுகொலைகள் இடம்பெற்றுள்ளன. இது கடந்த கால இன அழிப்பு நடவடிக்கைளை ஞாபகமூட்டுகிறது. மேலும் சமாதான பேச்சின் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என நம்புகின்ற வடகிழக்கு மக்களையும் நம்பிக்கை இழக்க வைக்கக்கூடிய நிலை தோன்றவும் வாய்ப்புள்ளது.

அத்தோடு, தமக்கு பாதுகாப்பு இல்லையென பாதிக்கப்பட்ட இளைய சமூகம் கருதுமாக இருந்தால் அது தற்போது இருக்கும் சமாதானத்திற்கு பாதகமான சூழலை மேலும் சிக்கலுக்கு உள்ளாக்கிவிடும்.

இருக்கின்ற பிரச்சினைகளையே தீர்த்துக்கொள்ள முடியாத நிலையில் மேலும் பிரச்சினைகளை உண்டுபண்ணுவதானது சமாதானத்தின் எதிர்காலத்தை சிதைத்துவிடும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

– சுயாதீனன்

# மலையக பெண்களின் கருவள அழிப்பு ஓர் எதிரொலி

இலங்கையின் மலையகப் பெருந்தோட்டங்களில் வாழ்கின்ற ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட மலையக தமிழர்களின் மக்கள் தொகை திட்டமிட்ட வகையில் இன அழிப்பு செய்யப்பட்டு வருகின்றது. வட, கிழக்கு தமிழ் மக்களிடமிருந்து தாக்கு பிடிக்க முடியாத போராட்டமொன்றை எதிர்கொள்ளும் பேரினவாத அரசு, அத்தகைய போராட்டம் ஒன்று ஒடுக்கப்பட்ட சமூகமான மலையக தமிழர் இடத்திலிருந்தும் வந்துவிடும் என்ற அச்சத்தில் சுதந்திரமடைந்த காலத்தில் இருந்தே பல்வேறு வழிகளில் தொடர்ச்சியாக மலையக தமிழினத்தை அழிக்கும் கைங்கரியங்களில் ஈடுபட்டு வந்துள்ளது.

திட்டமிடப்பட்ட இன வன்முறைகள், நாடு கடத்தல், குடியேற்றங்கள், பயிரழிப்பு மற்றும் காடாக்கல், அபிவிருத்தி திட்டங்கள் எனும் பெயரில் இனச்செறிவை சிதறடிக்கச் செய்தல், உணவு, சுகாதார, மருத்துவ வசதிகளை மறுப்பதன் மூலம் மரண வீதத்தை உயர்த்துதல் போன்றவற்றோடு திட்டமிட்ட அடிப்படையில் மலையக தாய்மார்களின் கருவளத்தை அழிப்பதன் மூலம் இன அழிப்பு செய்வதும் இடம்பெற்று வருகிறது. இங்கு கருவளத்தை திட்டமிட்டு அழிப்பது என்பது உயிர் வாழ்வதற்கான உரிமையை மறுக்கும் அடிப்படை உரிமை மீறலாகும். எவ்வாறெனினும் பல்வேறு கபடத்தனங்களினூடாக சிறுக சிறுக பரந்துபட்ட ரீதியில் மலையகமெங்கும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பெருந்தோட்டப்பெண்கள் தமிழர்கள், தொழிலாளர்கள் என்பதனால் அவர்கள் மீது பல்வேறு பரிமாணங்களில் ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. மலையக மக்களின் இனத்துவ இருப்பை மௌனமாக அழிப்பதற்கு 1984ம் ஆண்டுக்குப்பின்னர் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

பெருந்தோட்டப் பெண்களின் வறுமை நிலை, குறைந்த கல்வி அறிவு, ஆரோக்கியமற்ற வாழ்க்கைச்சூழல், போஷாக்கின்மை, மிகை உழைப்பு உறிஞ்சப்படுதல் என்பவற்றின் காரணமாக அவர்களிடையே எளிதாகவும் திட்டமிட்ட வகையிலும் கருத்தடைமுறை பிரயோகிக்கப்படுகின்றது இந்த பெண்களின் கருவளத்தை அழித்துக் கொள்ளுவதை தூண்டுவதில் அல்லது ஏமாற்றி மோசடியான முறையில் கருவளத்தை அழிப்பதில் தோட்ட நிர்வாகங்கள், தோட்ட மருத்துவர்கள், குடும்பத்திட்ட ஆலோசகர்கள், சுகாதார தொண்டர்கள், அரச சார்பற்ற அமைப்புகள், தோட்ட சமூக நல அபிவிருத்தி நிதியம் போன்ற அனைத்து தரப்பினரும் நேரடியாக அல்லது மறைமுகமாக இந்த சமூக துரோக திட்டத்துக்கு பயன்படுத்தப்படுகின்றனர். இத்திட்டமானது,

1. தாய்மாரின் விருப்புக்கு மாறாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.
2. தாய்மாருக்கு அது பற்றிய விளக்கமின்றியே மேற்கொள்ளப்படுகின்றது.
3. தாய்மாரின் குறைந்த கல்வி அறிவும், ஆணாதிக்க சமூக அமைப்பும் இதனை தூண்டுகிறது.


பொதுவாக கருத்தடை செய்துகொள்ள கருத்தடை செய்வதற்கு நவீன தற்காலிக முறை, நிரந்தர கருத்தடை முறை, பாரம்பரிய முறை என்பன காணப்பட்டாலும் மலையகப் பெண்கள் மீது சத்திர சிகிச்சை மூலம் நிரந்தரமாக கருவளம்



நிர்ப்பந்திக்கப்படும் பெண்கள் நிறுவனமயப்படுத்தப்பட்ட நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகிறார்கள். இனத்துவம், பால்நிலை, சமயம், பிரதேசம், வர்க்கம், பொருளாதாரம், அரசியல் என பல தரப்பட்ட நிர்ப்பந்தங்கள் இதற்குள் அடங்கும். இவற்றில் மலையக தமிழ் பெண்கள் இன அழிப்பு செய்யும் அரசின் நோக்கத்திற்கும், பொருளாதார நிலைப்பட்ட தனியார் நோக்கத்திற்கும், இனத்துவ நிலைப்பட்ட பேரினவாத நோக்கத்துக்கும் ஆளாகி கருவளம் அழிக்கப்படுகின்றமை முக்கியமானதாகும். கருவளம் அழிக்கப்படும் பெண்களின் 42வீதமானோர் அறவே கல்வி அறிவு அற்றவர்கள் என்பதும், 44 வீதமானோர் ஆரம்ப கல்வி மட்டுமே பெற்றவர்கள் என்பதும் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். கருவளத்தையுடைய 15-45 வயதுடைய பெண்களிடையே பிறப்பு வீதம் 26.5 வீதமாக வீழ்ச்சி அடைந்துள்ளது. அத்துடன் பிரசவ இடைவெளியும், சராசரியாக 32 மாதங்களாக காணப்படுகின்றது.

அழிக்கப்படுவதை காண முடிகின்றது. அதே வேளை 38வீதமான திருமணமான மலையக பெண்கள் கருகலைப்புக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இத்தகைய கருவழிப்பு யுத்தத்தினால் பிறக்கின்ற குழந்தைகளில் 42வீதமானோர் பிறப்பின் போதும், 18வீதமானோர் பிறப்பின் பின்னரும், மரணத்தை எட்டவேண்டிய துர்பாக்கிய நிலை உள்ளது. 29வீதமான பிறப்புக்கள் அவர்கள் குடியிருக்கும் லயன் அறைகளிலேயே நிகழ்வதும் வேதனைக்குரியது. மலையக மாவட்டங்களில் சிசு மரணவீதம் உயர்மட்டத்தில் இருப்பதையே புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. கருத்தடை காரணமாக பெருந்தோட்ட பாடசாலைகளுக்கும் ஆரம்ப கல்விக்கும் மாணவர்கள் இல்லாத நிலையில் பல தோட்டப்பாடசாலைகள் மூடப்பட்டு வருகின்றன. கருவள அழிப்பிற்கு உள்ளாகும் பெண்கள் பலவிதத்திலும் நோய் வாய்ப்பட்டு மரணத்தை தழுவுகிறார்கள். பல்வேறு பெருந்தோட்ட பிரதேசத்தில் பல்வேறு உபாயங்களினூடாக வருடத்திற்கு ஏறக்குறைய 12,000 கருக்கள் அழிக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட வேண்டியது. இற்றைக்கு 22 வருடங்களாக 2,50,000 அளவு கருக்கள் அழிக்கப்பட்டுவிட்டன. மலையக தமிழர்களின் சனத்தொகை அளவில் இது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை தெளிவு. எனவே இத்திட்டத்துக்கு எதிராக மக்கள் விழிப்புணர்வு திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

– பழ. மதிராஜன்
ஹட்டன்




## வாசகர் கவனத்திற்கு...

கருத்தாடல் களத்திற்கு உங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன.

அத்தோடு விழிப்பின் பதிவுகள் தொடர்பான உங்கள் அபிப்பிராயங்களையும் விமர்சனங்களையும் நாங்கள் எதிர் பார்க்கிறோம்.

எழுதி அனுப்ப வேண்டிய முகவரி

விழிப்பின் பதிவுகள்
யங் ஏசியா டெலிவிஷன்
இல, 713. டி.பி. விஜயசிங்க மாவத்தை,
பெலவத்தை, பத்தரமுல்லை.

மின்னஞ்சல் முகவரி: – villippu@yatv.net

## இவ்வார விழிப்பில்...

- வவுனியா மக்களுடன் விழிப்பு
- வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் சித்திரைப்புத்தாண்டு நிகழ்வுகளும் அம்மக்களது எதிர்பார்ப்புகளும்
- வவுனியா கச்சக்கொடி சிங்கள மக்களும் சித்திரை நிகழ்வுகளும்
- வவுனியா பிரதேச மாணவர்களுக்கான சமாதான நாடக விழா

ரீ.என்.எல் - செவ்வாய் இரவு 7.25 மணிக்கு

விழிப்பு நிகழ்ச்சி **TNL** அலைவரிசையில் செவ்வாய் தோறும் இரவு **7.25** மணிக்கும், ரூபவாஹினி 'ஐ'அலைவரிசையில் திங்கள் தோறும் இரவு **7.30** மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.
தொலைபேசி இலக்கம் 0112787041-9 தொலைநகல் இலக்கம் 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

# இன்று ஒரு தகவல்

## அளவும் அனுசரிப்பும்

ஒரு ஊரில் ஒருவன் இருந்தான் தையல் கடை வைத்திருந்தான் அவனிடம் ஒருவன் சட்டைத்துணி எடுத்துக் கொடுத்து தைக்கச் சொல்லியிருந்தான் வரும் சனிக் கிழமை வா.. வந்து வாங்கிக் கொண்டுபோ என்றான் கடைக் காரன்.

அதே மாதிரி இவன் வந்தான் அவன் தைத்து வைத்திருந்த சட்டையைக்கொடுத்தான். இவன் அதை வாங்கி அங்கேயே போட்டுப்பார்த்தான் கையின் நீளம் ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இருந்தது. வலது கை இடதுபக்கத்தை விட நீளம் குறைவாக இருந்தது.

அவன் முணுமுணுக்க ஆரம்பித்துவிட்டான். என்ன இது இப்படித் தைத்து விட்டாயே! என்று இதற்கு அவன் சொன்னான் அட இதற்காகவா சங்கடப்படுகிறீர்கள் வலது கையை மட்டும் சிறிது உள்ளே இழுத்ததுபோல் வைத்துக்கொண்டால் சரியாகிவிடும் எவ்வளவு அற்புதமாக தைத்திருக்கிறேன் பாருங்கள் ஒரு சிறு குறையை பொருட்படுத்தாதீர்கள் நான் சொன்னது போல் கையைக் கொஞ்சம் உள்ளே இழுத்து வைத்துக் கொண்டு போங்கள் என்றான்.

அவனும் யோசித்துப் பார்த்தான் சரியான யோசனையாகத் தோன்றியது. கொஞ்சம் முயற்சி செய்து வலது கையை உள்ளே இழுத்து சட்டை சரியாக இருப்பது போல் செய்துவிட்டான். இப்போது மீண்டும் ஒரு பிரச்சினை வலது கையை உள்ளேஇழுத்தது போல் வைத்ததும் முதுகுப் பக்கம் துணி தளர்வாக இருப்பது போல் தோன் றியது என்ன இது! முதுகுப் பக்கம் துணி தளர்ந்து விட் டதே என்றான்.

அவன் மீண்டும் ஆரம்பித்தான் இதற்காகவா கவலைப் படுகிறாய்? உடலை அதற்கேற்றால் போல் சிறிது வளைத்துக்கொண்டால் சரியாகிவிடும் இதற்கான அந்த அழகிய தையலைப் பிரித்து அதிலுள்ள கலையம்சத்தைக் கெடுக்க என் மனம் இடம் தரவில்லை! எவ்வளவுக்குத் தளர்வாக இருக்கிறதோ அவ்வளவுக்குக் கொஞ்சம் உடலை வளைத்துக்கொள் போதும் என்றான்.

அதுவும் நல்ல யோசனையாகப்பட்டது இவனுக்கு சரி என்று கூறிவிட்டு புறப்பட்டான் தெருவில் இறங்கினான் கையைக் கொஞ்சம் உள்ளே இழுத்தான் உடம் பைக் கொஞ்சம் வளைத்துக்கொண்டான் சட்டைக்கு ஏற்றால் போல் செய்து கொண்டு மெதுவாக நடந்து சென் றான்.

இப்போது எதிரில் இன்னொருவன் வந்தான் இவனைப் பார்த்தான் இவன் போட்டிருக்கும் சட்டையைப் பார்த்தான். "ஆகா! அற்புதம்" என்றான் "சும்மா சொல்லக் கூடாது மிகவும் நன்றாக உள்ளது. நிச்சயமாக இது இந்த ஊரின் மேற்கு வீதியிலுள்ள கடைக்காரன் தைத்தா கத் தானிருக்கவேண்டும் என்றான்.

இதைக்கேட்டதும் அவனுக்கு ஆச்சரியம் "எப்படி அவ்வளவு சரியாகச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டான். இதற்கு அந்த வழிப்போக்கன் சொன்னான் அவன் மிகவும் கெட்டிக்காரன் உங்களை மாதிரி உடலும் கையும் வளைந்து போன ஒரு ஆளுக்கு அவனைத் தவிர வேறு யாராலும் இவ்வளவு பொருத்தமான சட்டையைத் தைக் கமுடியாது என்றான்.

பாருங்கள் அவனுக்காக இவன் அனுசரிக்கப் போய் இவனது நிலைமை எப்படி ஆகிவிட்டது பாருங்கள் இதே போலத்தான் சில சடங்குகளும் சம்பிரதாயங்களும் நம் மைக் கோமாளியாக்கி விட்டுவிடும் எதுவாக இருந்தாலும் அதில் அறிவுபூர்வமான அணுகுமுறை அவசியம்.

ஒரு தாதி அவசரமாக ஓடி வந்து டாக்டரிடம் சொன்னார். "டாக்டர்! பத்தாம் நம்பர் கட்டிலில் இருக்கும் நோயாளிக்கு காலில் சத்திரசிகிச்சை செய்வதற்குப்பதிலாக தையல் செய்துவிட்டீர்கள் தையல் சிகிச்சை செய்ய வேண்டிய நபர் ஏழாம் நம்பர் கட்டிலில் இருக்கிறார் என றாராம்.

அதற்கு இவர் பதற்றப்படாமல் "பரவாயில்லை இவரைத்தூக்கி ஏழாம் நம்பர் கட்டிலில் போட்டுவிடு" என்றாராம்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நூல்வெளியீட்டு விழா

(பருத்தித்துறை)

அகில இலங்கை இளங்கோ கழகம் நடாத்தும் அமரர் தணிகாசலம் ஞானப்பூங்கோதை ஞாபகார்த்தமாக தென் புலோலியூர் பரா.ரதீஸ் எழுதிய பாண்டியன் பாவை (இலக்கிய நாடகம்)நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 3மணிக்கு புற்றளை மகாவித்தியாலய சீனியம்மா அரங்கில் வைத்திய கலாநிதி எம்.கே.முருகானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக புற்றளை மகாவித் தியாலய அதிபர் மு.அனந்தேஸ்வரனும், பிரதம விருந்தினராக கரவெட்டிக்கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.அம்பலவாணரும் கலந்துகொள்ளவுள்ளனர். (த-52)

# சர்வதேச நாடுகள் எங்களுக்கு ஆதரவாகவே செயற்படுகின்றன

## க.வே.பாலகுமாரன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தென்னாசியாவிலும் சர்வதேச ரீதியிலும் தமக்கு சாதகமான சூழலே நிலவுவதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்தார்.



கிளிநொச்சி அரச பணியாளர்களுக்கான சமகால அரசியல் ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.பசுபதிப்பிள்ளை தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட க.வே.பாலகுமாரன் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தேசவிரோதி கருணாவின் செயற்பாட்டினால் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரைவாசிப் பலம் குறைந்துள்ளதாகவும் அதன் பின் ஏற்பட்ட ஆழிப்பேரலையால் விடுதலைப் புலிகளின் மீதிப்பலமும் குறைந் துள்ளதாகவும் நம்பிக்கொண்டு மஹிந்த ராஜபக்ஷ செயற்படுகிறார்.

நோர்வேயின் சமாதான நடவடிக்கையினாலேயே விடுதலைப்புலிகள் இன்னமும் உஷாராக இருக்கின்றார்கள் இந்நிலையில் நோர்வேயையும் வெளியேற்றிவிட்டால் தமிழீழ விடுதலைப்புலிகள் முற்றாகவே செயலிழந்து விடுவர் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஜே.வி.பி ஹெல உறுமய போன்ற இனவாதக் கட்சிகளும் நம்பிக் கொண்டிருக்கின்றனர்.

இவர்களின் இந்த நம்பிக்கை எமக்கு சாதகமாக அமையுமே தவிர பாதகமான அமையாது ஏனெனில் சர்வதேச நாடுகள் பல எமக்கு இன்னும் ஆதரவு வழங்கிக் கொண்டே இருக்கின்றன என்றார். (கு)

# விடுதலைப்புலிகளின் அடுத்த இலக்கு இராணுவக் காவல் நிலையங்களாம்

## கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் உள்ள இராணுவக் காவல் நிலையங்களைத்தாக்குவதுதான் தமிழீழவிடுதலைப்புலிகளின் அடுத்த இலக்கு என்று புலனாய்வுத்துறை தகவல்களை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அச் செய்தியின் விவபரம் வருமாறு,

அமெரிக்கா உள்ளிட்ட சர்வதே சமூகத்தின் அழுத்தங்கள் மற்றும் ஜெனீவா முதல் சுற்றுப்பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்ட நிலையிலும் 150 விடுதலைப் புலி போராளிகள் கிளைமோர்த் தாக்குதல் நடத்துவதற்கான பயிற்சிகளை நிறைவு செய்துள்ளனர்.

கிளிநொச்சியில் இப்போராளிகள் பயிற்சிகளை நிறைவு செய்த நிகழ்வில் பங்கேற்க தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் விரைவில் அரச படைகளுடனான இறுதி மோதலுக்குத் தயாராக வேண்டும் என்று கூறியுள்ளார் அதே நிகழ்வில் ஆர்.பி.ஜி. தாக்குதல்களுக்கான அணியும் பயிற்சியை நிறைவு செய்துள்ளது.

புலனாய்வுத்துறை தகவல்களின்படி இராணுவத்தின் சிறு இராணுவ காவல் நிலையங்களை வடக்கு கிழக்கில் விடுதலைப் புலிகள் இலக்கு வைக்கக் கூடும்.

ஆர்.பி.ஜி.தாக்குதலுக்குப் பயிற்சி பெற்ற அணியினர் இத் தாக்குதல்களை மேற்கொள்ளக் கூடும் விடுதலைப்புலிகள் பயிற்சி பெற்ற புதிய போராளிகளை விடுவிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அண்மித்த பகுதியில் ஏற்கனவே ஆர்.பி.ஜி.களுடன் தயார் நிலையில் நிறுத்தி வைத்துள்ளனர்.

இந்த நிலைமைகள் ஒரு புறமிருக்க "காட்டுப் படையணி" என்ற சிறப்பு அணியை உருவாக்கி தொலை தூரத்திலிருந்து இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் கருணா குழுவினரை விடுவிக்கப்பட்ட பகுதிகளில் கொல்வதற்காக பயிற்சி அளித்துள்ளனர்.

அப்படையணியினர் அதிநவீன ஆயுதங்களையும் குண்டுகளையும் வைத்திருப்பதாக புலனாய்வுத்துறை தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

ஒட்டிசுட்டான் புதுக்குடியிருப்பில் மக்கள் துணைப் படையினரை விடுதல்லப்புலிகள் நிறுத்தியுள்ளனர். வீதியோரபங்கர்களில் ரி-56ரக துப்பாக்கிகளுடன் இந்த மக்கள் படைணியினர் பெருமளவில் நிலை எடுத்துள்ளதாகவும் புலனாய்வுத்துறை தகவல்கள் கூறுகின்றன.

கிளிநொச்சியில் தற்போதும் நூற்றுக்கணக்கான பொதுமக்களுக்கு விடுதலைப் புலிகளால் பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது.

பொதுமக்களுக்கும் போராளிகளுக்கும் பயிற்சி அளித்துக்கொண்டிருந்தாலும் அரச படைகள் மீதான தாக்குதலை விடுதலைப் புலிகள் தொடங்கியுள்ளனர்.

ஏப்ரல் 8ஆம் திகதி முதல் இதுவரை மொத்தம் 19 கிளைமோர் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதல் 70க்கும் மேற்பட்ட படையினரும் பொதுமக்களும் கொல்லப்பட்டு 110க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

அரச படைகளுக்கு எதிரான கிளைமோர்த் தாக்குதல்களை தாம் நிறுத்துமாறும் உத்தரவிடும் வரை தாக்குதலை நடத்துமாறும் பிரதேச தளபதிகளுக்கு விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் உத்தரவிட்டுள்ளது என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

# பொதுத்தேர்தலை சந்திக்க ஐ.தே.க தயாராகவுள்ளது

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்தினால் ஐக்கிய தேசியக்கட்சி அதற்கு முகம் கொடுக்கத் தயாராகவே உள்ளது என்று அக்கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு பொதுத்தேர்தல் ஒன்றுக்கு செல்வாரென பரவலாகப் பேசப்படுகின்றது. இதனால் ஐக்கிய தேசியக் கட்சி எந்தத் தேர்தலுக்கும் தயாராகவே இருக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். பொதுத்தேர்தல் ஒன்று நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுவதாக கருத்துக்கள் வெளியாகிவருகின்றமை தொடர்பாக கேட்டபோது திஸ்ஸ அத்த நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது,

மிக அண்மையில் நாட்டில் இருதேர்தல்கள் நடைபெற்றுள்ளன. இதனால் இன்னுமொரு தேர்தலை மக்கள் விரும்புவார்களா? என்று கூறமுடியாது இருப்பினும் ஜனாதிபதி தேர்தலுக்கு சென்றால் ஐக்கிய தேசியக் கட்சி அதனை வெற்றிகரமாக எதிர்கொள்ளும்.

கட்சியின் பிரதம வேட்பாளராக தலைவர் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார். கட்சியின்தலைவராகமிக ஷம்பலமான ஆதரவுடன் ரணில் விக்கிமரசிங்க செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார்.

இதேவேளை, இரண்டாம் கட்ட ஜெனீவாப்பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதுசந்தேகத்திற்குரியதாக மாறியுள்ளது. அரசாங்கத்தின் சமாதான செயற்பாடுகளில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன.

ஆனால் கடந்த ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் சுதந்திரக்கட்சி மற்றும் ஜே.வி.பி.யின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் மிகவும் சிறந்த முறையில் சமாதான செயற்பாடுகளை மேற்கொண்டது. சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி முழுமையான ஆதரவினை வழங்கியும் அரசாங்கத்தால் சிறந்த முறையில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க முடியாமல் உள்ளது.

ஜே.வி.பி.மற்றும் ஜாதிகஹெல உறுமயவின் எதிர்ப்புகளாலேயே அரசாங்கத்திற்கு இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியினையும் ஜாதிகஹெலஉறுமயவினையும் தூக்கிஎறிந்துவிட்டு தைரியமாக சமாதான செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும் என்றார். (க-7)

# யுவதிகள் உட்பட 67 பேர் போராட்டத்தில் இணைவு

தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் 67 பேர் பளையில் நேற்றுமுன்தினம் தம்மை முழுமையாக இணைந்துள்ளனர்.பளை மத்தியக் கல்லூரியில் பிற்பகல்4மணிக்கு போராளி அமீர் தலைமையில் அரசியல் கருத்தரங்கு நடைபெற்றது.அப்போது7யுவதிகள் உட்பட 67 பேர்தம்மை முழுமையாக போராட்டத்தில் இணைத்துக்கொள்ள முன் வந்துள்ளனர்.

அண்மைய நாட்களாக தமிழீழத்தாயகப் பகுதியில் பெரும் எண்ணிக்கையில் மக்கள் வயது வேறுபாடு இன்றி போராட்டத்தில் இணைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (கு)

# உலகக்கிண்ண உதைபந்தாட்டத்தின் வரலாறு

உலகக் கிண்ண உதைப்பந்தாட்டப் போட்டி போன்று எந்தவொரு விளையாட்டும் ரசிகர்களை ஈர்த்ததில்லை.

ஆம் 13ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிக்கு இன்னும் 46 நாட்களே உள்ள நிலையில் இந்தப் பிபா உலகக் கிண்ணத்தின் வரலாறு பற்றி நோக்குவோம்.

இந்த உலகக் கிண்ணப் போட்டிகள் முதலாவதாக 1930 ஆம் ஆண்டு உருகுவே நாட்டில் ஆரம்பமானது.

சர்வதேச உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் இணையம் (பிபா) தொடர்ந்து புகழுடன் வளர்ந்து வருகின்றது.

1920 ஆம் ஆண்டு சர்வதேசத்திலுள்ள உதைபந்தாட்டத்தில் தலைசிறந்த அணிகளை ஓரிடத்தில் அழைத்து அவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வரவேண்டும் என்ற சிறந்த சிந்தனையாளரின் யூல்ஸ் றிமெற் என்பவரின் முயற்சியினால் உருவானதே உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியாகும்.

இவரின் சிறந்த சிந்தனைக்காக அவரை கௌரவிக்கும் வகையில் யூல்ஸ் றிமெற் என்ற பெயரிலேயே 1930ஆம் ஆண்டு முதல் மூன்று உலகக் கிண்ண போட்டிகளும் நடைபெற்றது.





எனினும் 1938 ஆம் ஆண்டு நடைபெற்ற 3ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் பின்னர் இரண்டாவது உலகப் போர் காரணமாக 12 ஆண்டுகளின் பின்னரே 1950 ஆம் ஆண்டு 4 ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது.

மீண்டும் உலகில் ஒரு புதிய அழகுடன் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அளவில் உருவாகியுள்ளது.

1958ஆம் ஆண்டிலிருந்து ஒன்று விட்ட ஒரு நாடுகள் போட்டிகளை நடாத்துவதற்கு அனுசரணை வழங்குகின்றது.

1958ஆம் ஆண் டிலிருந்து ஐரோப்பா மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகள் உலகக்கிண்ணப் போட்டிகளிற்கு மைதானங்கள் அமைத்துப் போட்டிகளை நடாத்தி வந்தன.

எனினும் பின்னர் ஏற்பட்ட நாடுகளின் வளர்ச்சியினால் 2002 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியை ஆசிய நாடான ஜப்பான் மற்றும் கொரியா ஆகிய நாடுகள் இணைந்து நடத்தின.

1930ஆம் ஆண்டிலிருந்து 2002 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற 17 உலகக் கிண்ணப் போட்டிகளில் வேறுபட்ட 7 நாடுகளே கிண்ணத்தை கைப்பற்றியுள்ளது.

இன்று உலகக் கிண்ண போட்டிகளை நேரில் பார்வையிடுவதற்கு ஏராளமான ரசிகர்கள் திரள்கின்றனர்.

**R.U.பாலமுருகன்**

1998ஆம் ஆண்டு பிரான்சில் நடைபெற்ற உலகக் கிண்ண சுற்றுப்போட்டிகளை நேரில் கண்டுகளிக்க 37 பில்லியன் ரசிகர்கள் திரண்டிருந்தார்கள். 1998 ஆம் ஆண்டே பிரான்ஸ் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

அந்த உலகக் கிண்ணத்தின் இறுதிப் போட்டியை இரசிப்பதற்கு ஏறக்குறைய 1.3 பில்லியன் ரசிகர்கள் மைதானத்தில் திரண்டிருந்தனர்.

(வளரும்)



## கடந்த உலகக் கிண்ணங்களின் முடிவுகள்

| ஆண்டு | கிண்ணம் கைப்பற்றியது | இரண்டாவதாக தெரிவான நாடு | முடிவு | மூன்றாவதாக தெரிவான நாடு | போட்டிகளை நடாத்திய நாடு |
|---|---|---|---|---|---|
| 1930 | உருகுவே | ஆர்ஜென்ரீனா | 4-2 | ஐக்கிய அமெரிக்கா | உருகுவே |
| 1934 | இத்தாலி | சிசோஸ்வோவசிய | 2-1 (மேலதிகநேரம்) | ஜேர்மனி | இத்தாலி |
| 1938 | இத்தாலி | ஹன்கேரி | 4-2 | பிரேசில் | பிரான்ஸ் |
| 1950 | உருகுவே | பிரேசில் | 2-1 | சுவீடன் | பிரேசில் |
| 1954 | மேற்குஜேர்மனி | ஹன்கேரி | 3-2 | ஆஸ்ரியா | சுவீட்ஸர்லாந்து |
| 1958 | பிரேசில் | சுவீடன் | 5-2 | பிரான்ஸ் | சுவீடன் |
| 1962 | பிரேசில் | சிசோஸ்வோவசிய | 3-1 | சிலி | சிலி |
| 1966 | இங்கிலாந்து | மேற்குஜெர்மனி | 4-2 (மேலதிகநேரம்) | போர்த்துக்கல் | இங்கிலாந்து |
| 1970 | பிரேசில் | இத்தாலி | 4-1 | மேற்குஜெர்மனி | மெக்ஸிக்கோ |
| 1974 | மேற்குஜேர்மனி | ஹொலன்ட் | 2-1 | போலந்து | மேற்குஜேர்மனி |
| 1978 | ஆர்ஜென்ரீனா | ஹொலன்ட் | 3-1 (மேலதிகநேரம்) | பிரேசில் | ஆர்ஜென்ரீனா |
| 1982 | இத்தாலி | மேற்குஜெர்மனி | 3-1 | போலந்து | ஸ்பெயின் |
| 1986 | ஆர்ஜென்ரீனா | மேற்குஜெர்மனி | 3-2 | பிரான்ஸ் | மெக்ஸிக்கோ |
| 1990 | மேற்குஜேர்மனி | ஆர்ஜென்ரீனா | 1-0 | இத்தாலி | இத்தாலி |
| 1994 | பிரேசில் | இத்தாலி | 0-0 (3.2தண்டனை உதைகள்) | சுவீடன் | ஐக்கியஅமெரிக்கா |
| 1998 | பிரான்ஸ் | பிரேசில் | 3-0 | குரோரியா | பிரான்ஸ் |
| 2002 | பிரேசில் | ஜேர்மனி | 2-0 | துருக்கி | கொரியாமற்றும் ஜப்பான் |

## மலையக இளைஞர்களை இராணுவத்தில் சேர்க்க முயற்சி

(கொழும்பு)

இலங்கையின் பாதுகாப்பு அமைச்சின் மூலம் மலையகப்பகுதியில் இளைஞர்களை இராணுவ தொண்டர்படையில் சேர்ப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும், இது மலையக மக்களின் நன்மை கருதி உருவாக்கப்படும் தொண்டர் படையெனவும் பிரதி சுகாதார போஷாக்கு அமைச்சர் வடிவேல் சுரேஸ் தெரிவித்துள்ளார்.

இதனால் மலையக இளைஞர்களை எந்தத் தயக்கமும் இன்றி தொண்டர் படையில் இணையுமாறும் அவர் கேட்டுள்ளார்.

18முதல் 24 வயதுவரையிலான 5ஆம், 6ஆம் வகுப்பு வரை கல்வி கற்பவர்கள் இந்தப் படையில் இணைய முடியுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நேர்முகப் பரீட்சைகள் இன்று முதல் 28 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. (க-9)

## மணல் அகழ்வுக்கு பிரதேச, மாவட்ட செயலகங்களே அனுமதி வழங்கும்

தேசிய மணல் கொள்கைத் திட்டத்தை அமுல்படுத்துவதற்குத் தேவையான சிபார்சுகளையும், சரத்துக்களையும் அடங்கிய சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேசியக் கொள்கை அமுல்படுத்தப்பட்டதும், நிர்மாணத்துறை மணல் பயன்பாடு சீரமைக்கப்படும் என்று சுற்றாடல் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப்பணியகத்தின் கண்காணிப்பின் கீழ் மணல் தோண்டும் செயற்பாடுகள் என்பன பிரதேச மற்றும் மாவட்ட செயலகங்களுக்கு மாற்றப்படும்.

இதற்கமைய மணலை அள்ளுவதற்கு உத்தரவுப் பத்திரங்களை வழங்கும் அதிகாரம் இந்த செயலகங்களுக்கே வழங்கப்பட்டுள்ளன. (க-7)

## மலையக இளைஞர்களை இராணுவத்தில் சேர்க்கும் முயற்சிக்கு இ.தொ.ஐ.மு கண்டனம்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்திற்கு மலையக இளைஞர்களை சேர்த்துக்கொள்ளும் முயற்சிக்கு இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக முன்னணி விடுத்துள்ள அறிக்கையில்,

மலையக இளைஞர்கள் முன்னர் பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட போது அவர்களின் சேவையானது மலையகத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருக்குமென உறுதியளிக்கப்பட்டிருந்தது.

ஆனால் காலப்போக்கில் மலையகத்திலிருந்து பொலிஸ் துறையில் இணைத்துக் கொள்ளப்பட இளைஞர்கள் வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.

பலர் போர் இடம்பெற்ற பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்டதால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கினர்.

இத்துடன் இவர்கள் பெரும் பாதிப்பிற்குள்ளானார்கள். இதனால் பலர் வேலையை விட்டு விலகினார்கள்.

எனவே, மலையக இளைஞர்களை இலங்கை இராணுவத்திற்கு பலிகொடுக்க மலையக தமிழ் சமூகம் தயாரகவில்லை.

இதேவேளை ஏற்கனவே உறுதியளிக்கப்பட்ட 3ஆயிரம் ஆசிரிய நியமனங்கள் 2 ஆயிரத்து 500 சமூக உதவியாளர் நியமனங்கள் போன்றவை இழுத்தடிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் மலையக இளைஞர்களை படையணியில் சேர்ப்பது வியப்புக்குரியது.

இராணுவத்தில் இணைய பெரும்பான்மை இன இளைஞர்கள் தயக்கம் காட்டும் நிலையில், தமிழ்த்தேசியத்திற்கு எதிராக மலையக இளைஞர்களை திருப்பிவிடும் இந் நடவடிக்கைக்கு மலையக மக்கள் ஒரு போதும் ஒத்துழைக்கப் போவதில்லை என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-9)

### சைக்கிளை பெற்றுக்கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதம தபால் அலுவலகத்தில் பெண்களுக்கான (லேடிஸ்) சையிக்கிள் ஒன்று இருவாரகாலமாக அநாதரவான நிலையில் விடப்பட்டுள்ளது.

எனவே உரியவர்கள் தகுந்த ஆதாரத்தைக் காட்டி சையிக்கிளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க-9)

## க.பொ.த. உயர்தரப் பரீட்சை வெட்டுப்புள்ளிகள் விரைவில்

(கொழும்பு)

கடந்த ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சை வெட்டுப் புள்ளிகள் எதிர்வரும் புதன்கிழமைக்கு முன்னர் வெளியிடப்படும்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவித்த இந்தத் தகவலில்- புள்ளிகள் இணையத்தளத்திடம் வெளியிடப்படும் எனக் கூறப்படுகிறது.

கடந்த ஆண்டிலும் பார்க்க 2 ஆயிரத்துக்கும் கூடுதலான மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இவற்றில் எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் சுமார் 18 ஆயிரம் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க இதுபற்றி தெரிவிக்கையில்,

இந்த நடவடிக்கை இலங்கை உயர் கல்வியில் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்துகின்றது எனக் கூறினார். மருத்துவ பீடங்களுக்கு மேலும் 195 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

கிழக்கு மற்றும் இராஜரட்டை பல்கலைக் கழகங்களில் புதிய மருத்துவ பீடங்களை ஆரம்பிக்கும் சாத்தியம் பற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

மஹிந்த சிந்தனை கோட்பாடுக்கமைய உயர்கல்வி மேம்பாட்டுக்கு மேலதிக வளங்களை அளிப்பதற்கு ஜனாதிபதி அனுமதி வழங்கியுள்ளாரென்று பேராசிரியர் சமரநாயக்க தெரிவித்தார்.

பல்கலைக்கழக சமூகத்தின் இந்த வளங்களை உச்சகட்டமாகப் பயன்படுத்தி திறன்பட செயல்பட வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார். (க)

### நிதியுதவி

தேசிய உயர் தொழில்நுட்ப நிறுவனத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஜேர்மன் அரசாங்கம் 12 மில்லியன் யூரோ நாணயத்தை வழங்க முன்வந்துள்ளது.

இந்த நிறுவனத்தின் கல்வித்துறை வளர்ச்சிக்கு இந்த நிதியுதவி பயன்படுத்தப்படும் என்று தொழில் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை கைத்தொழில் துறையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கும் இந்த நிறுவனம் விசேட திட்டமொன்றை ஏற்கனவே ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-7)

# திருப்பதி



## திரை விமர்சனம்

துரோகம் செய்யும் நண்பனுக்கும் அவனுடைய கூட்டாளிகளுக்கும் பாடம் புகட்டும் நேர்மையான இளைஞனின் கதை.

'சவுண்ட் சர்வீஸ்' நடத்தும் இளைஞன் திருப்பதி. அவனுடைய நண்பன் அமைச்சரின் மகன். தவறு செய்பவர்களைத் தட்டிக்கேட்கும் குணம் படைத்த திருப்பதி, தனது நண்பனுக்காக எதையும் செய்யத் தயாராக இருக்கிறான். இந்த நிலையில் திருப்பதியின் தங்கையை பிரசவத்துக்காக ஒரு ஆஸ்பத்திரியில் சேர்க்கிறார்கள்.

திருப்பதியை, அமைச்சரின் மகள் டாக்டர் ஒருவரிடம் கமிஷன் வசூலிக்க அழைத்துச் செல்கிறான். அதே நேரத்தில் ஆபரேஷனுக்காகக் கேட்கும் பணத்தை உடனே கொடுக்க வசதி இல்லாததால் டாக்டர் சிகிச்சை அளிக்க தாமதம் செய்கிறார். இதனால் திருப்பதியின் தங்கை மரணம் அடைகிறாள். ஆஸ்பத்திரி சென்று பார்க்கும்போது சுகபிரசவம் நடக்க வாய்ப்பு இருந்தும், டாக்டரின் பண ஆசையால் சரியான சிகிச்சை அளிக்கப்படாததால் தனது தங்கை இறந்தது தெரிய வருகிறது.

அந்த டாக்டரைச் சந்திக்கத் திருப்பதி போகிறான். அவர் அவனுடைய நண்பனின் அண்ணன் என்பதும் அவனைப் பாதுகாப்பதற்காகத் திருப்பதியைக் கொலை செய்யவும் நண்பன் தயாராக இருக்கிறான் என்பதும் தெரிய வருகிறது. இதனால் பொங்கியெழும் திருப்பதி தனது நண்பனைப் பழிவாங்கப் புறப்படுகிறான். பண ஆசை பிடித்த டாக்டரின் கதி என்ன? திருப்பதி அவனுடைய நண்பனைப் பழி தீர்த்தானா? அமைச்சரின் அதிகார பலத்தில் இருந்து தப்பிக்க திருப்பதி செய்த தந்திரம் என்ன? தொண்டாகச் செய்ய வேண்டிய மருத்துவ பணி வியாபாரம் ஆக்காமல் தடுக்க திருப்பதி செய்தது என்ன?

இந்தக் கேள்விகளுக்குச் 'சுறுசுறு'வென அதிரடியாகப் பதில் சொல்வது மீதிக்கதை.

திருப்பதியாக அஜீத். 'சவுண்ட் சர்வீஸ்' அதிபராக வருவது வித்தியாசம். அறிமுக காட்சி அட்டகாசம். அவரது ஆட்களுடன் சேர்ந்து திருவிழா, பிறந்தநாள், பூப்புனித நீராட்டு விழாக்களுக்குச் சென்று செய்யும் கலாட்டா செம கலகலப்பு. தங்கை மீது வைத்திருக்கும் பாசம் உருக்கம். நண்பனே துரோகம் செய்கிறான் என்பது தெரிந்ததும் கொதித்தெழுவது ஆவேசம். நண்பனை வைத்தே டாக்டரைப் பழிவாங்குவதும், நண்பனைப் பிடித்து வைத்துக்கொண்டு அமைச்சரை ஆட வைப்பதும் அஜீத்தின் அக்ஷனுக்கு மட்டுமல்ல கதையின் வேகத்துக்கும் கைகொடுக்கின்றன. மிரள வைக்கும் சண்டைக் காட்சிகளும் நடனங்களும் அஜீத் ரசிகர்களுக்கு விருந்து.

திருப்பதியிடம் கலாட்டா செய்யும் கலகல காதலியாக சதா. விதம் விதமாக அஜீத்தைச் சீண்டுவது ரசனை. கதைக்கு தேவையான இடங்களில் மட்டும் வந்து சொன்ன வேலையைக் கச்சிதமாகச் செய்து இருக்கிறார். காதல் காட்சிகளில் சிக்கென்று நடித்து இருக்கிறார். சதாவை இன்னும் கொஞ்சம் பயன்படுத்தியிருக்கலாம்.

நண்பனாக ரியாஸ்கான், அரசியல்வாதியாக லிவிங்ஸ்டன், அஜீத் தம்பியாக ஹரிஷ் ராகவேந்தர், தங்கையாக தீபு, அமைச்சராக பிரமிட் நடராஜன் எல்லோருமே அந்தந்தப் பாத்திரங்களாக பதிந்திருக்கிறார்கள். பெஞ்சமின், சத்யன், கஞ்சாகறுப்பு ஆகியோர் கலகலப்பு. ஆர்.சுந்தர்ராஜன், ராஜலட்சுமி, அருண்பாண்டியன், பாத்திமா பாபு, எம்.எஸ்.பாஸ்கர், மல்லிகா ஆகியோரும் உள்ளனர். வில்லனாக சம்பத் மிரட்டுகிறார்.

எவி.எம்மின் திருப்பதி படத்துக்குக் கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள், இயக்கம் பேரரசு.

முன் பகுதியில் சுவாரஸ்யமும், பின் பகுதியில் திடீர் திருப்பத்துடன் அதிரடியும் கலந்து கொடுத்திருக்கிறார். ஆரம்பத்தில் சாதாரணமாக நகரும் கதை. பின்னர் மின்சாரமாகப் பாய்கிறது. 'நான் இறங்கிப் போறவன் இல்லேடா... ஏறிப்போறவன்டா...' என்று அஜீத்தைச் சொல்ல வைத்து அவரது ரசிகர்களை கை தட்ட வைத்திருக்கிறார் பேரரசு.

கதைக்குச் சம்பந்தம் இல்லாத காட்சிகளும் உண்டு என்றாலும் கதை சொல்லும் வேகத்தில் சிறு சிறு குறைகளைத் திரும்பிப் பார்க்கவிடாமல் செய்திருக்கிறார். பாடல்களுக்குப் பல அர்த்தம். பேரரசு ஆட்டோ டிரைவராகவும் தோன்றி அட்டகாசம் செய்கிறார்.

எஸ்.சரவணன் ஒளிப்பதிவும் பேசுகிறது. பரத்வாஜ் இசையில் பாடல்கள் துள்ளல் 'திருப்பதி வந்தா திருப்பம்' பாடல் திரும்பத் திரும்ப ஒலிக்கும். பின்னணி இசை காட்சிகளுக்கு கூடுதல் பலம். சண்டைக்காட்சிகள் பிரமாண்டம். தயாரிப்பு: எம்.சரவணன், எம்.எஸ்.குகன்.

அஜீத் ரசிகர்களுக்குப் பிடித்தமான அத்தனை அம்சங்களையும் கொடுத்திருப்பது திருப்பதியான தரிசனத்துடன் வழங்கப்பட்டுள்ள லட்டு. கதையின் 'கரு'வை சென்டிமென்ட் ஆக அமைத்துப் பெண்களின் வாக்குகளையும் மொத்தமாக அள்ளும் பேரரசுக்கு பேரரசு பட்டமும் கொடுக்கலாம்.

**திருப்பதி – தீப்பொறி.**



# முதல் முதலாய்


கே.பாக்கியராஜ் முக்கிய வேடத்தில் நடிக்க, 'முதல் முதலாய்' என்ற பெயரில் ஒரு புதிய படம் தயாராகிறது.

இந்தப் படத்தில் புதுமுகங்கள் மகேஷ் – மது கதாநாயகன் – கதாநாயகியாக அறிமுகம் ஆகிறார்கள். ப்ரீத்தி வர்மா, கிசர் மனோகர், கிரேன் மனோகர் ஆகியோருடன் புதுமுகங்கள் சிவசக்கரவர்த்தி, ஜெயந்த், சந்தன், ஸ்ரீலதாவும் பங்கேற்கிறார்கள்.

திரைப்பட வரலாற்றில் முதன் முதலாகப் பார்வையற்ற இசை கலைஞர் கோமகன் இந்தப் படத்தில் இசையமைப்பாளராக அறிமுகம் ஆகிறார். கவிஞர் கவிமுகில் 5 பாடல்களை எழுதியிருக்கிறார். வில்லியம்ஸ் ஒளிப்பதிவு செய்கிறார்.

கதை – திரைக்கதை எழுதி டைரக்ட் செய்கிறார் பெஞ்சமின். ஈ.பி.பி.கிரியேஷன்ஸ் சார்பில் ஈ.பி.பாண்டியன் வழங்க, ஆல் மைட்டி கம்பைன்ஸ் இந்தப் படத்தைத் தயாரிக்கிறது.

# மீண்டும் சேர்ந்த நாகேஷ் – மனோரமா



நாகேஷ் – மனோரமா ஜோடியின் நகைச்சுவைக்காகவே ஓடிய படங்கள் பல உண்டு. ஆண்டுக்கணக்கில் முத்திரை பதித்த இந்த ஜோடி பின்னர் பிரிந்துவிட்டது.

வயதைக் கருத்தில் கொண்டு படங்களில் நடிப்பதை நாகேஷ் குறைத்துக்கொண்டார்.

இப்போது மீண்டும் நாகேஷ் – மனோரமா ஜோடி சேர்ந்து நடிக்கிறார்கள்.


படம் 'இம்சை அரசன் 23 ம் புலிகேசி' இதில் இருவரும் வடிவேலுவின் அப்பா – அம்மாவாக வருகிறார்கள். 'நாகேஷ் – மனோரமாவின் தீவிர ரசிகன் நான். என்னுடன் சேர்ந்து அவர்கள் நடிப்பது எனது பாக்கியம்' என்று பெருமைப்படுகிறார் வடிவேலு.

## ஓசையில்லாமல் சமூக சேவை

தம்பி நாயகியான இரண்டெழுத்து நடிகை ஓசையில்லாமல் பல சமூக சேவைகளைச் செய்து வருகிறார்.

வாங்குகிற சம்பளத்தில் ஒரு பகுதியை அனாதை இல்லங்கள் மற்றும் சமூக சேவை அமைப்புகளுக்கு அள்ளி கொடுத்துவிடுகிறார். இது வேறு எந்த நடிகையும் செய்யாத சேவை.

# சினிமாச் சிதறல்



'சம்திங் சம்திங் உனக்கும் எனக்கும்'
பிரபு – த்ரிஷா

## புகழாரம்

சினேகா மலையாளத்தில் மம்முட்டி ஜோடியாக 'துருப்பு குலான்' என்ற படத்தில் நடித்து வருகிறார். இப்போது வாய் திறந்தால் நிமிடத்துக்கு நிமிடம் மம்முட்டி புகழ்தான் பாடுகிறாராம்.

* * *

தரணி டைரக்ஷனில் 'பங்காரம்' என்ற தெலுங்குப் படத்தை ஏ.எம்.ரத்னம் தயாரித்து வருகிறார். இந்தப் படத்தின் கதை விஜய்யை கவர்ந்திருப்பதாகப் பேசப்படுகிறது. 'பங்காரம்' படத்தை தமிழில் தயாரிக்கும்உரிமை விஜய் தரப்பில் வாங்கப்பட்டு இருக்கிறது.

## அதிகரிக்கும் வாய்ப்பு

கேரளாவில் இருந்து வந்த நயன்தாரா, அசின், நவ்யாநாயரை தொடர்ந்து 'சித்திரம் பேசுதடி' பாவனாவும் தமிழ் பட உலகில் தனி இடம் பிடித்திருக்கிறார். மலையாளம், தெலுங்கு, கன்னடத்திலும் நடிக்கிறார்.

தமிழில் இப்போது மாதவன் ஜோடியாக ஆர்யா, பரத் ஜோடியாக 'வெயில்', 'கூடல் நகர்' படங்களிலும் எஸ்.எஸ்.ஸ்டேன்லி இயக்கும் புதிய படத்தில் ஸ்ரீகாந்த் ஜோடியாகவும் நடிக்கிறார். அடுத்து பாலா இயக்கத்தில் 'நான் கடவுள்' படத்தில் அஜீத் ஜோடியாக நடிக்கவும் ஒப்பந்தம் ஆகியிருக்கிறார். கால்ஷீட் இல்லாததால் சில படங்களை ஒப்புக்கொள்ள முடியாமல் இருக்கிறாராம்.

## மாறிய கொள்கை

சத்யராஜ் சமீபத்தில் வெற்றி வேல் சக்திவேல் கோவை பிரதர்ஸ் ஆகிய படங்களில் மகன் சிபியுடன் சேர்ந்து நடித்தார்.

தற்போது சிபி வேறு படங்களில் நடித்து வருகிறார். சத்யராஜுக்கும் தனியாக நடிக்க வாய்ப்பு வந்துள்ளது. எனவே சிறிதுகாலம் இருவரும் தனித்தனியாக நடிக்க முடிவு செய்திருக்கிறார்கள். பொருத்தமான கதை வந்தால் கொள்கை மீண்டும் மாறுமாம்.

* * *

அசின் கடந்த ஆறு மாதங்களாக எந்தத் தமிழ் படங்களையும் ஒப்புக் கொள்ளவில்லை.



'வேட்டை'
ஆகாஷ் –
கீர்த்திசாவ்லா

## 'பார்வை திரும்பியது



'அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது' படம் திரைக்கு வந்தபிறகு அந்தப் படத்தில் அழகான வாலிபராக நடித்த அருண் மீது ரசிகர்கள் பார்வை அதிகமாக விழுந்திருக்கிறதாம்.

படம் வெளியானது முதல் கல்லூரி மாணவிகளும், நண்பர்களும், ரசிகர்களும், திரை உலக பிரமுகர்களும் பாராட்டிக்கொண்டே இருக்கிறார்களாம். டைரக்டர் சேரன் கேட்டுக்கொண்டதால் இந்தப் படத்தில் நடித்தேன். இதனால் நல்ல பெயர் கிடைத்திருக்கிறது. புதிய படங்களில் நடிக்கவும் வாய்ப்பு வந்திருக்கிறது. கதை கேட்கிறேன். தேர்வு செய்து நடிப்பேன் என்கிறார் அருண்.

## செந்தில் செம பிஸி!



சினிமாவில் வரும்படி இல்லாத நிலையில் அரசியலில் மாதம் நான்கு முதல் ஐந்து இலட்சம் வரை உழைக்கிறார் நடிகர் செந்தில். ஒரு நாளைக்கு மேடை பேச்சுக்கு ரூ.15 ஆயிரம் கூலி! அங்கே அன்பளிப்புகள்... என குவியும் பண்ட பாத்திரங்கள் என செந்தில் செம பிஸி.

'அட... இப்படி தெரிஞ்சிருந்தா இன்னும் கொஞ்சம் முன்னாடியே குதிச்சிருக்கலாமப்பா.. அரசியல்ல' என்று தன் சகாக்களிம் சொல்லி ஜோக் அடிக்கிறார்.

## 'காதல்' சந்தியாவுடன் காதல்

முன்பு மீராஜாஸ்மினுடன் இணைத்துப் பேசப்பட்ட பிருதிவராஜ். இப்போது காதல் சந்தியாவுடன் இணைத்து கிசுகிசுக்கப்படுகிறார்.





இரண்டு பேருமே கேராளவைச் சேர்ந்தவர்கள். அதனால் மலையாளத்திலேயே இவர்கள் காதல் வளர்கிறது.

அடிக்கடி செல்போன்களில் காதல் வர்த்தைகளை பரிமாறிக் கொள்கிறார்கள்.

இவர்கள் இருவரும் சந்தித்துக் கொண்டது ஒரு மலையாள படப்பிடிப்பில்தான். அந்த நிமிடத்திலேயே காதல் இருவரிடையே பற்றிக்கொண்டதாகக் கூறப்படுகிறது.


இரண்டு பேருமே இப்போது தமிழ் படங்களில் நடித்துக் கொண்டிருப்பதால் இவர்களிடையே காதல் எந்தவித தங்கு தடையும் இல்லாமல் வள்ர்ந்து வருகிறது.

தென் பாண்டிச் சீமையிலே... என்ற நாயகன் படப்பாடலை தனது மொபைலில் ரிங்டோனாக வைத்துள்வார் பரத்.

* * *

கலாபக் காதலன் படத்தில் ரேணுகாமேனனின் தங்கையாக நடித்த அக்ஷயாவின் செல்போனுக்கு டயல் செய்தால் சிச்சி சிச்சி ச்சீ என்ற மஜாவான பாடல் ஒலிக்கும்.

'சொல்லி அடிப்பேன்'
விவேக் – சாயாசிங்



'ஒரு பொண்ணு ஒரு பையன்'
சந்திப் – ரூபா



## மினி ரவுடி



விக்ரமுடன் மீண்டும் 'பீமா' படத்தில் ஜோடி சேர்ந் திருக்கும் திரிஷாவுக்கு மினிரவுடி வேடம். படம் முழுவதும் வந்து வெளுத்துக்கட்ட இருக்கிறாராம். இதற்காக இப்போதே பயிற்சி எடுக்கிறாராம்.

இந்தப் படத்தில் ஹிந்தி நடிகர் நானாபடேகர் முக்கிய வேடத்தில் நடிக்கிறார். இந்தப் படத்தின் பெரும்பாலான படப்பிடிப்பை இலங்கையில் நடத்த இருந்தனர் இப்போது ஐதராபாத்திலும், வைசாலியிலும் படப்பிடிப்பு நடத்த திட்டமிட்டுள்ளனர்.

கவிதைச் சங்கிலி படைக்கிறார் கமல் அப்படி என்றால்? ஸ்பொட்டில் அடிக்கொரு தரம் ஒரு நவீன கவிதை எழுதிக் காட்டி யூனிட்டை உச் கொட்ட வைக்கிறாராம்

## யோகா சதா



சதா அவருடைய உடல் ஒல்லியாக இருப்பதற்குக் காரணம் யோகாதான் என்கிறார்.

'நான் அரிசி சாதம், சப்பாத்தி, சிக்கன், ஐஸ்கிரீம் எல்லாமே சாப்பிடுகிறேன். உடலை வருத்தி உடற்பயிற்சி செய்வது இல்லை. ஆனால் நேரம் கிடைக்கும்போது எல்லாம் யோகா செய்கிறேன். அதனால்தான் நான் ஒல்லியாக இருக்கிறேன்' என்று விளக்கம் கொடுக்கிறார் சதா.

புது ஹீரோக்களுடனும், புது கம்பெனியிலும் நடிக்க மாட்டேன் என்று சொன்ன சதா திருப்பதிக்கு பிறகு புதிய ஹீரோ ஒருவருடன் 'ஜுலை காற்று' என்ற படத்தில் நடிக்கிறார்.

படப்பிடிப்பு அவுஸ்திரேலியாவில் நடக்கிறது. ஜீவா இந்தப் படத்தை இயக்குகிறார்.

வி.சி.குகநாதனும் விசுவும் இது எம்.ஜி.ஆர்.இல்லம் படத்தில் இணைகிறார்கள். கதை எழுதி படத்தை தயாரிப்பவர் குகநாதன் திரைக்கதை – வசனத்தை விசு எழுதுகிறார். இருவருமே ஏவி.எம்.மில் பணிபுரிந்தவர்கள் என்ற ஒற்றுமையும் இவர்களுக்கு உண்டு.



'தலைநகரம்'
சுந்தர்சி – ஜோதிர்மயி

# புத்தாண்டு பலாபலன்கள்

# உங்கள் ராசிக்கு எப்படி?



## விருச்சிகம்

*உடல் ஆரோக்கியம்:-* உங்களுக்கு உடல்நலம் சுமாராகத் தேறிவிடும் என்றாலும் அடிக்கடி பயணங்கள் ஏற்பட்டு அலைச்சல் டென்ஷன் அடைவீர்கள். உஷ்ண சம்பந்தமான உடல் உபாதைகள் அடிக்கடி உண்டாகி மறையும். மனதில் கவலைகள் குறையும். புத்திரர்களின் வழியில் சிறிது மருத்துவ செலவு உண்டாகி பின்பு நலமடைவார்கள். மனைவி வழியில் கர்ப்பக் கோளாறுகள் விலகிப் படிப்படியாக முன்னேற்றம் உண்டாகும். நிதானமுடன் செயல்படுங்கள்.

***கொடுக்கல் வாங்கல்:-*** கொடுக்கல் வாங்கலில் பெரிய தொகைகளையும் முன்ஜாமீன்களையும் தருவது கூடாது. சிறிய அளவில் அனுகூலமான பலன் அடைவீர்கள். சிலருக்கு கடன்தொல்லைகள் பிற்பாதியில் குறையும். எதைச் செய்வது என்றாலும் சற்று யோசித்து செய்தால் நன்மைகள் கிடைக்கும். வம்பு வழக்குகளில் இருந்த மந்தமான நிலை மாறி சற்றே சாதகப் பலன் உண்டாகும். வீடு, மனை, வண்டி, வாகன வகையில் ஏற்பட்ட வீண் செலவுகள் குறைந்து மனதில் அமைதி உண்டாகும் ஆண்டாக இருக்கும்.

*தொழில் வியாபாரம்:-* செய்யும் தொழில் வியாபார நிலையில் மந்தமான நிலை காணப்பட்டாலும் உங்களது திறமைகளால் படிப்படியாக முன்னேற்றத்தை காண்பீர்கள். ஓரளவுக்கு இலாபமும் உண்டாகும். தற்போது பெரிய அளவில் அபிவிருத்தி, முதலீடு செய்வது, புதிய தொழிலை தொடங்கும் வரை செய்யாமல் இருப்பது உத்தமம். கூட்டுத் தொழில் கூட்டாளிகளையும் வேலையாட்களையும் அனுசரித்து போவது மிகவும் உத்தமம்.

*உத்தியோகத்தர்களுக்கு:-* அரசு, அரச சார்ந்த உத்தியோகத்தர்களுக்கு இக்காலத்தில் தடைதாமதத்துடன் பதவி ஊதிய உயர்வுகள் அமையும். அதிகாரிகளின் கெடுபிடிகள் இருந்தாலும் உங்களது திறமைகளால் வெற்றிகாண்பீர்கள். சிலருக்கு தனியார் துறையில் நல்ல வேலைகிட்டும். விரும்பிய இடமாறுதல் கிடைத்து மனமகிழச்சியடைவீர்கள். வெளியூர் வெளிநாட்டுப் பயணம் அலைச்சலை ஏற்படுத்தினாலும் உங்களுக்கு அது அனுகூலப் பலனையே ஏற்படுத்தும் என்பது உண்மைதான்.

*பெண்களுக்கு:-* உங்களது வயிறு கோளாறுகள் கர்ப்பக் கோளாறுகள் யாவும் விலகி மனதில் அமைதியும் உடலில் சக்தியும் உண்டாகும். கணவன், மனைவி இடையே நிலவிய கருத்து வேறுபாடுகள் குறைந்து ஒற்றுமை உண்டாகும். தடைப்பட்ட திருமண முயற்சிகளை தற்போது மேற்கொண்டால் பிற்பாதி ஆண்டில் திருமணத்தை முடித்துவிட முடியும். உத்தியோக நிலையிலும் வேலைப்பளு குறைவதோடு அதிகாரிகளின் முழு ஆதரவைப் பெறுவீர்கள். புதிய வேலைவாய்ப்பு கிட்டும்.

*மாணவமாணவியருக்கு:-* கல்வியிலும் விளையாட்டிலும் சற்றே படிப்படியான உயர்வுகளை அடைவீர்கள். உங்களது முயற்சிகளில் அனுகூலம் உண்டாகும். பெற்றோர் ஆசிரியர்களின் ஆதரவு அதிகரிக்கும். நண்பர்களுடன் நல்ல நட்பினை பராமரிப்பீர்கள். புதிய பாடத் திட்டங்களை புரிந்துகொண்டு ஓரளவு மதிப்பெண் பெறுவீர்கள். வெளியூர்களில் விடுதிகளில் தங்கி படிக்கும் மாணவர்கள் சற்றே கவனமாக செயல்பட்டால் படிப் படியாக உயர்வு பெறலாம்.

*கலைஞர்களுக்கு:-* உங்களது தொழில் ரீதியான போட்டி, பொறாமைகள் படிப்படியாக விலகிவிடும். தடைப்பட்ட பட வாய்ப்புகளை தற்போது பெறும் சூழ்நிலையால் மகிழ்ச்சியடைவீர்கள். அசையா சொத்து வகையில் ஏற்பட்ட வழக்குகள் உங்களுக்கு சாதகமாகும். வெளியூர் வெளிநாட்டு பயணங்களில் சற்று சோர்வு தான் உண்டாகும். அனுகூலம் கூடும்.

*பொதுவாழ்வில்உள்ளவர்களுக்கு:-* அரசியல்வாதிகளுக்கு ஏற்பட்ட கெட்ட பெயர் மாறிவிடும். உங்களை குற்றமற்றவர் என மக்களும் தொண்டர்களும் படிப்படியாகப் புரிந்து கொள்வார்கள். உங்கள் தேவைகள் பூர்த்தியாகும். உடன் இருப்பவர்களை நம்பி எந்த ஒரு செயலையும் செய்வதை தாமதப்படுத்துவது உத்தமம்.

*தொழிலாளர்களுக்கு:-* உங்களது உழைப்பின் கடுமை குறையும். உழைப்பிற்கு ஏற்றபடி ஊதியம் பெறும் நிலை உண்டாகும். முதலாளி தொழிலாளி பிரச்சினைகளை பேசி தீர்ப்பது மிகவும் நல்லது சிலர் விவசாயப் பணிகளை மேற்கொண்டு அனுகூலம் பெறுவார்கள்.

### *14.04.2006 முதல் 29.06.2006 வரை*

உங்கள் ராசிக்கு இக்காலத்தில் சனிபகவான் பாக்கிய ஸ்தானமான 9ல் சஞ்சரிக்கிறார். ஞானக்காரகனாக கேது பகவான் லாபஸ்தானமான 11ல் சஞ்சரிப்பதால் உங்களது கஷ்டங்கள் கவலைகள் எல்லாம் விலகி உயர்வான நிலையினை சந்திப்பீர்கள். எடுக்கும் எந்த ஒரு காரியமும் வெற்றியினை ஏற்படுத்தும். உங்களது ஆரோக்கியம் மிகவும் பிரமாதமாக தேறிவிடும். மனதில் தைரியமும் அமைதியும் உண்டாகும். இதுவரை முடியாமல் இழுத்தடித்த பிரச்சினைகளை கூட தைரியமாக செயல்பட்டு முடித்துவிடுவீர்கள். மனைவி, பிள்ளைகளும் சுபிட்சமாக அமைவார்கள். மருத்துவச் செலவுகள் விலகிவிடும். குடும்பத்தில் சகோதரர்கள் ஒற்றுமையுடன் செயல்படுவார்கள். குடும்பத்தில் உற்றார் உறவினர் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். திருமண சுபகாரிய முயற்சியில் பங்குகொண்டு அதனை சிறப்பாக முடித்து தருவதில் உதவியாக அமைவார்கள். பொருளாதார நிலையில் தடைப்பட்ட பணவரவுகள் தற்போது வரும் என்றாலும் சிக்கனமாக செலவுகளை மேற்கொள்ள வேண்டும். வீடு, மனை, வண்டி, வாகனம், ஆடை, ஆபரண சேர்க்கைகளும் அமையப் பெறும். கொடுக்கல் வாங்கலில் நிலவிய சங்கடமான நிலை மாறி அனுகூலப் பலன் உண்டாகும். வம்பு வழக்குகளில் வெற்றிகிட்டும். தொழில் வியாபார நிலையில் நிலவிய கடுமையான போட்டி பொறாமைகள் மறைந்து ஓரளவுக்கு எதிர்பார்த்த இலாபமும் அமையப் பெறும். கூட்டுத் தொழில், கமிஷன், ஏஜென்ஸி, காண்டிராக்ட் இவற்றில் மேன்மைகள் ஏற்படும். உத்தியோகத்தர்களின் வேலைப்பளு குறையும். பதவி ஊதிய உயர்வுகள் அமையும். வேலை தேடுபவர்களுக்கு நிரந்தரமான நல்ல வேலை அமையும். மாணவர்களின் மந்த நிலை மாறி மதிப்பெண் பெறுவார்கள்.

### *30.06.2006 முதல் 20.10.2006 வரை*

உங்கள் ராசிக்கு இக்காலத்தில் விரைய ஸ்தானமான 12ஆம் வீட்டில் குரு சஞ்சாரம் செய்வது தேவையற்ற தூரப் பயணங்களை ஏற்படுத்துவதோடு அலைச்சல் டென்ஷன் வீண் விரையங்களையும் உண்டாக்கும் அமைப்பாகும்.

நீங்கள் எதிலும் சற்று நிதானத்துடன் செயல்பட வேண்டிய காலமாகும். உங்கள் கோபத்தை கட்டுப்படுத்தினால் குடும்பத்தில் உள்ளவர்களும் உங்களை அனுசரித்துப் போவார்கள். கணவன், மனைவி இடையே சிறுசிறு பிரச்சினைகள் உண்டாகி மறையும் என்றாலும் ஒற்றுமை பாதிக்காது. பிள்ளைகளால் சற்றே உதவிகள் கிடைக்கும். உற்றார், உறவினர் நண்பர்களின் உதவி தக்க சமயத்தில் கிடைக்காது என்றாலும் உங்களுக்கு ஆதரவாகவே அமைவார்கள்.

எதிர்பாராத வகையில் திடீர் பணவர வுகள் ஏற்பட்டாலும் செலவுகளும் அதுபோலவே எதிர்பாராமல் ஏற்படும். இக்காலத்தில் சுபவிரயங்களே அதிகம் இருக்கும். ஸ்தல தரிசனம் செல்வீர்கள். சிக்கனமாக செலவுகளை செய்தால் மட்டுமே கடன் இல்லாத நிலையோ அல்லது குறைவான கடன்களோ அமையும். திருமண சுபகாரிய முயற்சிகள் எடுத்தாலும் தாமதித்து கைகூடும். கொடுக்கல் வாங்கலில் வாக்கு றுதியை தருவது கூடாது. யாரையும் நம்பி பெரிய தொகை தருவது சோதனையை ஏற்படுத்தும். மாணவர் களின் கல்வியில் முயற்சி தேவை. விவசாயி களுக்கு ஓரளவு விளைச்சல் சாதகமாகும். தொழில், கமிஷன், ஏஜன்ஸி, காண்டிராக்ட் போன்றவற்றில் படிப்படியான ஏற்றம் ஏற்படும். இலாபம் சுமாராக இருக்கும். உத்தியோகத்தர்கள் விரும்பிய படியே பிற்பாதியில் பதவி ஊதிய உயர்வுகள் அமையப் பெறும் என்றாலும் வேலைப் பளுவும் பொறுப்புகளும் கூடும் காலமாகும்.

### *21.10.2006 முதல் 2.12.2006 வரை*

உங்கள் ஜென்ம ராசியில் குருபகவான் சஞ்சாரம் செய்வது சாதகமற்ற அமைப்பாகும். ஜென்ம ராசியில் குரு சஞ்சரிப்பதால் உங்களது உடல்நலம் பாதிப்படையும். அதிக அலைச்சல், டென்ஷனால் சோர்வு உண்டாகும். வீண்விரயங்கள் கடந்த காலத்தில் ஏற்பட்டவை விலகும் என்றாலும் கடினமான உழைப்பிற்கு ஆளாக நேரிடும். உங்கள் மனதில் அமைதியற்ற சூழ்நிலை உண்டாகும். பித்தம் நரம்பு சம்பந்தமான பாதிப்புகள் ஏற்பட்டு சோர்வு அடைவீர்கள். மனைவி வழியிலும் உடல்நலம் பாதிப்படையும். பிள்ளைகளால் உதவி இருக்காது. உற்றார், உறவினர்கள் நண்பர்கள் பகையாவார்கள். தொழில் வியாபார நிலையில் கடுமையான போட்டி பொறாமைகள் உண்டாகி லாபம் குறையும்.

நீங்கள் எதிர் பார்த்த படி எந்த ஒரு புது முயற்சியிலும் வெற்றியைப் பெறமுடியாது. இடையூறுகளால் திருமண சுப முயற் சிகள் தடைப்படும். வேலையாட்களே தொழில் வியாபார நிலையில் துரோகம் செய்வார்கள். வெளியூர் வெளிநாட்டு பயணம் அலைச்சல் டென்ஷன் தருவதோடு அதன்மூலம் சிக்கலில் சிக்கிக்கொள்ளவும் நேரிடும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகளின் கெடுபிடியால் மன வருத்தம் உண் டாகும். என்னதான் உழைத்தாலும் திருப்திபடமாட்டார்கள்.

ஊதிய உயர்வு பதவி உயர்வுக்கு தடைகள் உண்டாகும். கணவன், மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்துப் போனால் மட்டுமே குடும்ப வாழ்வில் நிம்மதி இருக்கும். கொடுக்கல் வாங்கலில் எதிர்பாராத வம்பு வழக்குகளில் சிக்கிக் கொள்ள நேரிடும். மாணவர்கள் அடிக்கடி விடுப்பு எடுத்து மந்தமடைவார்கள். எதிலும் நிதானமும் கவனமும் தேவை. அரசியல்வாதிகள் பதவிக்கு நெருக்கடியை சந்திப்பார்கள். விவசாயிகளுக்கு புழு பூச்சிகள் தொல்லை தரும்.

### *3.12.2006 முதல் 13.04.2007 வரை*

உங்கள் ஜென்ம ராசியில் குருபகவான் சஞ்சரிப்பதும் சுகஸ்தானமான 4இல் ராகு 10இல் கேது சஞ்சரிப்பதால் உங்களது சுகவாழ்வில் சோதனைகள் தொடரும் காலமாகவே அமையும். உங்களது மனம் ஒரு நிலையில் இருக்காது. அலை பாய்ந்த படியே இருக்கும். மனக்குழப்பத்தால் உடல் நலமும் பாதிக்கும். அதிகமான மருத்துவச் செலவுகளை ஏற்படுத்தும். தாய்வழியில் தேவையற்ற வம்பு பகை உண்டாகும். மனைவியின் உடல் நலத்திலும் வயிறு உபாதைகள் என தேவையற்ற மன அமைதி குறைவு உண்டாகும். பிள்ளைகளால் மனதில் சஞ்சலம் உண்டாகும். தேவையற்ற வீண்பிரச்சினைகளில் சிக்கவைப்பார்கள். பெண்கள் பேச்சைக் குறைத்து கொள்வது மூலம் அக்கம்பக்கம் வீண்சண்டை சச்சரவுகளை தவிர்த்து விடமுடியும். வண்டி, வாகனமும் பழுதடையும். அசையா சொத்து வகையில் வீண் செலவுகளை செய்யநேரிடும். கணவன், மனைவி இடையே அடிக்கடி கருத்து வேறுபாடுகள் தோன்றும். உற்றார், உறவினர்கள் நண்பர்களால் உதவிகளைப் பெறமுடியாது. பொருளாதார நிலையில் தன வரவுகளில் தடைகள் உண்டாகும். கடுமையான பண நெருக்கடிகளால் கடன்களால் தொல்லை உண்டாகும். எடுக்கும் எந்த ஒரு முயற்சிக்கும் திருமண சுபகாரிய தடை ஏற்படும். தொழில் வியாபார நிலையில் மறைமுக போட்டிகள் எதிர்ப்புக்கள் அதிகரித்து இலாபம் குறையும். கூட்டாளிகளுடன் சற்று அனுசரித்துப் போவது உத்தமம். உத்தியோக நிலையில் கடின உழைப்புக்கு ஆளாக நேரிடும். பொறுமையாக செயல்படுவது நல்லது. மாணவர்களுக்கு மந்த மான நிலை உண்டாகும். சாதனை செய்ய தடை ஏற்பட்டு மன அமைதி குறையும்.

*பரிகாரம்:-* உங்கள் ராசிக்கு விரைய ஸ்தானமான 12ஆம் வீட்டில் குருபகவான் 20.10.2006 முடியவும் அதன்பிறகு ஜென்மராசியிலும் சஞ்சரிக்க உள்ளார்.

இதனால் நீங்கள் வியாழன் விரதம் மேற் கொண்டு குரு தட்சிணாமூர்த்திக்கு கொண்டைக் கடலை மாலை, முல்லைமலர் மாலை, மஞ்சள் துண்டு சாற்றி குருமந்திரம் குரு காயத்ரியை 9முறை கூறி 9நெய் விளக்கு ஏற்றி வழிபட்டால் உங்கள் துயரங் கள் விலகும். 21.09.2006வரை சர்ப்பகிரகமான ராகு 5லும் அதன்பிறகு 4லும் சஞ்சரிக்க உள்ளதால் சர்பேஸ்வரரை வழிபாடு செய்வதும் அம்மன் வழிபாடு, பாம்பு புற்றுக்கு பால் வார்ப்பது ராகு கால பூஜையில் பங்கெடுத்துக் கொள்வது மூலம் உங்கள் புத்திர வழியில் நிம்மதியை உண்டாக்கும். (தொடரும்)

# நெல்சன் மண்டேலா

த. பாண்டியன்

## மீள்பார்வை

### பிறந்த மண்ணை நோக்கி.... 24



வால்டர் சிசுலு தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸின் தலைவர்களுள் ஒருவர். நோபல் பரிசு பெற்றவர்.

1955 செப்டம்பரில் மண்டேலா மீதிருந்த தடை முடிவுக்கு வந்தது. இதைப் பயனபடுத்தக் கொண்டு தான் பிறந்த ஊருக்குப் போய் வயதான தாயையும் உறவினர்களையும் பார்த்து விட்டு வரலாம் என நினைத்தார். போராளியாக இருந்தாலும் பெற்ற தாயையும் பிறந்த மண்ணையும் மறப்பது எளிதான காரியமல்ல. போவதற்கு திட்டமிட்டு தயாராகிக்கொண்டிருந்த மண்டேலாவை அவரது மகள் மக்காசிவே ஓடிவந்து கட்டிப் பிடித்து நானும் வருவேன் என அழத் தொடங்கியது. மண்டேலா மனைவியுடனும் குழந்தைகளுடனும் இருந்த நேரம் மிக மிகக் குறைவு. அரசின் தடை உத்தரவுகளை துச்சமென மதித்து மீறிப் பழகிய மண்டேலாவுக்கு குழந்தையின் மழலைக் கட்டளையை மீற முடியாத சங்கடம் ஏற்பட்டது. அவளைத் தூக்கிக் கொண்டு போய் முத்த மிட்டுகதை சொல்லி தூங்க வைத்தபின் வண்டியில் ஓடி ஏறினார்.

பழைய பாதை இளமையில் விளையாடிய இடங்கள் நினைவுக்கு வந்தன. போகும் வழியில் ஆபிரிக்க மாவீரர்கள் வெள்ளையர்களை எதிர்த்துப் போராடி வீரமரணம் எய்திய சரித்திரப் புகழ் பெற்ற இடங்களை பார்த்து வணங்கிக் கடந்து கொண்டிருந்தார். போகும் வழியில் பல தேசபக்த போராட்ட வீரர்களை பார்த்து பேசிவிட்டு முன்னேறிக் கொண்டிருந்தார். அவர்களின் கருத்தை அறிவது அவரது முக்கிய நோக்கம் டர்பனில் நேட்டால் இந்திய காங்கிரஸின் தலைவர் டாக்டர் நாயக்கரையும் சந்தித்து தேக்கமடைந்திருக்கும் அவரது கட்சியை முடுக்கி விடக்கேட்டுக்கொண்டார். தன் மூப்படைந்த தாய்யை அவர் நலிவடைந்த நிலையில் கண்டபோது கண்ணீர் வடித்தார். அதே குடிசை அதே பழைய ஆடை அதே அடுப்பு மண்டேலா சில பலகாரங்களும் மாமிசமும் வாங்கி வந்திருந்ததைத் தாயிடம் தந்தார். அவர் அதை எடுத்துக் கொண்டு சமைக்கப் போனார். இருந்து சாப்பிடும்படி வற்புறுத்தினார். தாயின் அன்புக்கு மூப்பு ஏது? தளர்ச்சி ஏது?

மறுநாள் தன் தங்கைகளை பார்க்கப் போனார் தங்கை மேபல் சுறுசுறுப்பானவள் நல்ல அழகி ஆனால் அவளுக்குத் திருமணம் நட்ந்ததே ஒரு வேடிக்கையான கதை. அவளுடைய அக்காள் வாலிவே என்பவளுக்கு மாப்பிள்ளை பார்த்திருந்தார்கள். சமூக வழக்கப்படி மாப்பிள்ளை வீட்டார் ஆடு, மாடு, பணம் பரிசமாகப் போட்டிருந்தனர். ஆனால் யாருக்கும் சொல்லாமல் வாலிவே தன் காதலனுடன். ஓடிப்போய்விட்டாள் வறுமைப்பட்டிருந்த குடும்பம் பரிசப்பொருள்களை திருப்பித்தர முடியவில்லை அதைச் சமாளிக்க மேபல் தனது அக்காளுக்குப் பதிலாக அவரை மணந்து கொண்டார். இந்தச் செய்திகளையெல்லாம் மண்டேலா அன்றுதான் கேட்டுத்தெரிந்து கொண்டார். மண்டேலா பதினைந்து நாட்கள் தங்கியிருந்தார் அவர் பிறந்த குனு என்ற கிராமத்தில் தெரிந்த மக்களையெல்லாம் போய் பார்த்தார். பின்னர் ரீஜெண்ட்டின் விதவை நோ இங்கிலாந்தையும் போய்ப் பார்த்தார். அவரும் தாயைப் போலவே மண்டேலாவை வரவேற்றார் மண்டேலா இங்கு தங்கியிருந்ததற்கு தாய் தங்கை உறவு பாசம் என்பதெல்லாம் ஒரு திரைத்தான்.

அவர் அங்கு வந்ததற்கே முக்கியமான காரணம் தென் ஆபிரிக்கா அரசு இனக் குழுத் தலைவர்களை தன் வசம் சேர்க்க ஒரு புதுத் திட்டத்தைக் கொண்டு வந்திருந்தது. டிரான்ஸ்க்கி பகுதிக்கு சபத்ரதா நோய்வாய்ப்பட்ட பிறகு டோலிவோங்கா தலைவராகவும் 18 பேர் கொண்ட ஓர் ஆலோசனைக்குழுவும் நியமிக்கப்பட்டது. இதை உறவினரான டோலிவோங்கா நிராகரிக்க வேண்டும் என வற்புறுத்தவே மண்டேலா வந்திருந்தார். ஆனால் டோலிவோங்கா அரசின் உறுதிமொழிகளை வெகுவாக நம்பினார். தென் ஆபிரிக்கா அரசு இனக்குழுத்தலைவர்களின் அதிகாரத்தை அங்கீகரிப்பதாகவும் வாதாடினார் மண்டேலா. எவ்வளவு வாதாடியும் டோலிவோங்கா ஏற்கவில்லை. எனவே மண்டேலா மீண்டும் ஜோகன்ஸ்பர்க்கை நோக்கி திரும்பிச்சென்றார்.

திரும்பும் வழியில் கந்தை உடையில் நின்ற ஒருவன் கரில் தன்னை ஏற்றிச் செல்ல வேண்டினான். அவனைப் பற்றி மண்டேலாவுக்கு சந்தேகம் வந்தது. போலீஸ்காரனாகக் கூட இருக்கக் கூடும் என்று சந்தேகித்தார். அவன் கடத்தலில் ஈடுபட்டு காவல் துறைக்குப் பிடிபடாமல் தப்பி ஓடி வந்தவன் என்பது பின்னர் தெரிந்தது. நெடுநேரம் பேசிய பிறகு அவன் படித்து பட்டம் பெற்றிருந்தும் வேலை கிடைக்காததால் இந்த சமூக விரோத செயலில் ஈடுபட்டிருந்தான் என்று தெரிந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக அவன் ஆபிரிக்கா தேசிய காங்கிரஸ் நடத்திய பல போராட்டங்களில் சிறை சென்று மீண்டதும் தெரிந்தது. உறுப்பினர் அட்டையையும் அவன் காட்டினான் ஒரு பெரும் தேசிய இயக்கத்தில் பல தரத்தினர் பல வகையினர் இருக்கக் கூடும் என்பதையும் ஒவ்வொரு மனிதனும் சூழ் நிலைகளால் தள்ளப்பட்டு சமூக விரோதியாக ஆக்கப்படுகிறான் என்பதையும் மண்டேலா உணர்ந்தார் கடத்தலில் ஈடுபட்ட அதே மனிதன் தேச விடுதலை இயக்கத்தில் போராளியாக நின்றான் என்பதையும் பார்க்க முடிந் தது.

திரும்பும் வழியில் கேப் நகரத்தில் வந்து தங்கினார். அங்கு மெத்தாடிஸ்ட் சர்ச் பாதிரியார் ரெவரண்ட் வால்டர் வீட்டில் தங்கியிருந்தார் மறு நாள் ஜான்சனையும் கிரீன் வுட்டையும் சந்தித்தார். இவர்கள் இருவரும் கம்யூனிஸ்டுகள் வெஸ்லியன் கிறிஸ்துவ சபையைச் சேர்ந்தவர்கள் தென் ஆபிரிக்காவைப் பொறுத்தவரையில் கிறிஸ்துவ சபைகளும் கம்யூனிஸ்டுகளும் ஒரு திசை வழி பயணிகளாகவே இருந்தன. எதிரும் புதிருமாக நிற்கவில்லை. கம்பியூனிஸ்டுகள் ஆபிரிக்க தேசிய காங்கிரஸிலும் கிறிஸ்துவ சபைகளிலும் உறுப்பினர்களாக இருந்தனர். இவர்கள் மூன்று அமைப்புக்களிலும் ஒருவர் உறுப்பினராக இருக்க முடிந்தது. கம்யூனிஸ்டுகள் திருச்சபையில் பொறுப்பேற்பது ஏன் எனக் கேட்டபோது மக்கள் இருக்கிற இடத்தில் நாமிருக்க வேண்டும் எனப்பதை கூறுவது உண்டு இவ்வாறு இத்தகைய மூன்று சக்திகள் ஒன்றுபட்டதற்கு பாசிச எதிரியே காரணம் என்கிறார் மண்டேலா.

இந்த நகரத்தில் தெருவில் நடந்து கொண்டிருந்தபோது ஒரு வெள்ளைக்காரப் பெண் பிச்சை எடுப்பதை மண்டேலா கண்டார். அவருக்கு அது ஆச்சரியமாக இருந்தது. கருப்பர்கள் பிச்சை எடுப்பது காலங்காலமாக பிறப்போடு வந்தது. ஆனால் வெள்ளையர்கள் பிச்சை எடுப்பது காணாத ஒன்று மண்டேலா தன்னையும் அறியாமல் அவருக்கு காசு கொடுத்து உதவப்போனார். இந்த உணர்வுக்கு என்ன காரணம் என்று மண்டேலா ஆய்ந்து கொண்டே இருந்தார். ஒன்றும் புலப்படமால் மேலே நடந்தார். இறுதியாக ஊர் திரும்பிய போது ஆபிரிக்கா தேசிய காங்கிர சின் அலுவலகம் சோதனையிடப்படுவதைக் கண்டார். நாடு முழுவதும் சோதனை நடந்ததைத் தெரிந்து கொண்டார். பல நண்பர்களையும் சந்தித்த பிறகு இனி தீவிரமான போராட்டத்தைத்தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்தார்.

திரும்பியவுடன் ஆபிரிக்கா தேசிய காங்கிரசின் நிர்வாகக் குழுவில் தான் சென்று திரும்பியதில் கிடைத்த விவரங்களைச் சொன்னார். அது மகிழ்ச்சியான செய்தியாக இல்லை டிரான்ஸ்கீய் பகுதியில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் நன்கு வேரூன்றிப் பரவியிருக்கவில்லை இனக் குழுத் தலைவர்களும் தேசியக் காங்கிரசின் யோசனையை ஏற்கவில்லை இந்த நிலையில் இனக்குழுத்தலைவர்கள் கூறியதையே தேசிய காங்கிரஸ் ஏற்றுக்கொள்வது நல்லது என்ற யோசனையை மண்டேலா சொன்ன போது அனைவரும் அதிர்ச்சியடைந்தனர். சில சமயங்களில் மக்களின் உணர்வுகளை மதித்து ஏற்று அதற்கு ஏற்ப நடப்பது நல்லது. பின்னர் அனுபவத்தில் மக்கள் வளர்ந்து நாம் விரும்புகிற பாதைக்கு வரக் கூடும்.

(தொடரும்)

# ஜெனீவாப்பேச்சு நடைபெறும் நோர்வே நம்பிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையேயான ஜெனீவா பேச்சுக்கள் விரைவில் நடைபெறும் என்று நோர்வே அரசாங்கம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இலங்கை அமைதி முயற்சிகளுக்கான நோர்வே சிறப்புப் பிரதிநிதி ஹன்சன் பௌயர் இலங்கையில் தொடர்ந்து அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தி வருகிறார்.

ஜெனீவாவில் விரைவில் பேச்சுக்கள் நடத்துவது தொடர்பாக அவர் விவாதித்து வருகிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கான நடைமுறைச் சாத்தியமான பயண ஒழுங்குகள் தொடர்பாகவும் அமைதிப் பேச்சுக்களுக்கான புதிய நாளைத் தீர்மானிப்பது தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டு வருகிறது என்ற நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். (ஓ)

# சேருவிலவில் கிளைமோர் 2 பொலிஸ் உயிரிழப்பு

(கொழும்பு)

திருகோணமலை சேருவில பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட கிளைமோர்த்தாக்குதலில் பொலிஸார் கொல்லப்பட்டனர். இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கிளிவெட்டியிலிருந்து திரும்பிக்கொண்டிருந்த போது சேருவில பிரிவுக் குட்பட்ட தங்க நகர் கிராமத்தில் கிளைமோர்த் தாக்குதலில் பிற்பகல்2 மணியளவில் பொலிஸ் வாகனம் சிக்கியது.

சம்பவ இடத்திலேயே இருவர் கொல்லப்பட்டனர் மேலும் இரு பொலிஸார் படுகாயமடைந்துள்ளனர். கொல்லப்பட்ட பொலிஸ் உடல்கள் சேரு நுவர மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச)

# முகாமைத்துவ இணைந்த சேவைக்கு மேலும் 100 பேர் இணைக்கப்படுவர்

(கொழும்பு)

அரச நிறுவனங்களில் நிலவும் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் முகாமைத்துவ இணைந்த சேவைக்கு மேலும் ஆயிரம் பேர் நியமிக்கப்படவுள்ளனர். இவர்களுக்கான நியமனங்கள் எதிர்வரும் மே மாதம் முதல் வாரத்தில் வழங்கப்படுமென பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு செயலாளர் திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக அரச சேவையில் மேலும் சுமார் இரண்டாயிரம் வெற்றிடங்கள் உள்ளன. இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு புதிதாக போட்டிப் பரீட்சையொன்று நடத்த வேண்டிய தேவையுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். 2002ஆம் ஆண்டு அரச சேவைக்கான போட்டிப் பரீட்சையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தகைமையுள்ளோர் அரச சேவைகளில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இறுதியாக மாவட்ட ரீதியில் சலுகைவெட்டுப்புள்ளிகள் வழங்கி ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது.

கடந்த மார்ச் மாதத்திலும் ஏப்ரல் முதல் வாரத்தில் சுமார் ஆயிரத்து 800 பேருக்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றன.

இதன் மூலம் 700 பேரே தகைமையுள்ளவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். 2002ஆம் ஆண்டு போட்டிப்பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்ட நிலையில்எஞ்சியுள்ளவெற்றிடங்களை நிரப்புவதற்கு புதிதாகபோட் டிப் பரீட்சையொன்றை நடாத்த பொது நிர்வாக அமைச்சு தீர்மானித் துள் ளது.

இதற்கான முன்னோடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் விரைவில் இப்போட்டிப்பரீட்சை நடத்தப்படுமெனவும் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

# படையினரின் சோதனையால் சிரமப்படும் பொதுமக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் நேற்று முன்தினம் பல்வேறு பிரதேசங்களில் படையினரின் சோதனைக் கெடுபிடிகள் அதிகரித்துக் காணப்பட்ட தால் மக்கள் பெரும்சிரமங்களை எதிர்கொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் போக்குவரத்தில் ஈடுபட்டவாகனங்கள் சில சோதனைசெய்யப்பட்டதுடன் மக்களும் தீவிர விசாரணைக் குட்படுத்தப்பட்டு அடையாள அட்டை காட்டிய பின்னரே தொடர்ந்து போக்குவரத்தில் ஈடுபட அனுமதிக்கப்பட்டனர். அடையாள அட்டை எடுத்துவராத மாணவர்கள் முதல் முதியவர்கள் வரை தடுத்துவைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர்.

குறிப்பாக விசேட அடையாள அட்டை இல்லாதவர்கள் படையினரால் பெரும் துன்புறுத்தலுக்கு உள்ளாகி இருக்கின்றனர். படையினர் நாவலர் வீதியில் சோதனை செய்த பின்னர் அதே வீதியில் பின்னர் இலுப்பையடி சந்தியில் வைத்தும் சோதனையிட்டனர்.

படையினர் இவ்வாறு தொடர்ச்சியாக பல இடங்களில் சோதனை செய்து விசாரணை செய்யப்பட்ட பின்னர் போக்குவரத்து செய் வதற்கு அனுமதிக்கப்பட்டதால் பெரும் அசௌகரியங்களை எதிர் கொள்ளவேண்டியிருந்தது. திடீரெனபடையினர் மேற் கொண்ட இந்த சோதனைக் கெடுபிடியால் மக்கள் யுத்த காலத்தில் நடத்தப்பட்டது போன்ற ஓர் உணர்வை ஏற்படுத்தியிருக்கின்றது.

இதேவேளை, அண்மையில் முஸ்லிம் இளைஞன் ஒருவன் முனீஸ்வரன் வீதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத் துக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் குடாநாட்டில்நேற்றுமுன்தினம்ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-15)

## விசேட மகாசபை கூட்டம்

(துன்னாலை)

துன்னாலை வடக்கு ஆயில் நின்றொல்லை விநாயகராலய விசேட மகாசபைக்கூட்டம் இன்று காலை 10மணிக்கு ஆலயமண்டபத்தில் தலைவர் செ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இறைவணக்கத்துடன் ஆரம்பமாகும் நிகழ்வில் 10ஆம் திருவிழா இரவு உபயகாரர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற் துறையினிடம் கொடுத்த முறைப்பாடு சம்பந்தமாக ஆராயப்படவுள்ளதால் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமூகம்தந்து கருத்துரைகளை வழங்குமாறு மகாசபைத் தலைவர் அறிவித்துள்ளார். (க-10)

# ICC சர்வதேச கிரிக்கெற் சபை ICC

## INTERNATIONAL CRICKET COUNCIL

26

## ஒருநாள் கிரிக்கெற் போட்டி–இணைப்பாட்டம்

ஒருநாள் கிரிக்கெற் போட்டியைப் பொறுத்தவரை இணைப்பாட்டம்(PARTNERSHIP) என்பதும் முக்கியம் பெறுகின்றது.

அணியின் விக்கெற்றுக்கள் மளமள வென்று சரியும் போதும், அல்லது ஆரம்பம் முதலே விக்கெற்றுக்களில்இருவர் நின்று வேகமாகவோ அல்லது கள நிலைமையைப் பொறுத்து துடுப்பெடுத்தாடும் போதும் அணியின் வெற்றி உறுதிப்படுத்தப்படுகின்றது.

அவ்வகையில் அதிகூடிய இணைப்பாட்ட சாதனையாக இந்திய அணி வீரர்கள் ராகுல் ராவிட் மற்றும் சச்சின் டெண்டுல்கர் – இருவரும் இணைந்து இரண்டாவது விக்கெற்றுக்காகப் பெற்ற 331 ஓட்டங்களே சாதனையாகக் காணப்படுகின்றது.

நியூஸிலாந்து அணிக்கெதிராக ஹைதராபார்த் மைதானத்தில் 1999/00 காலப்பகுதியில் இச்சாதனை படைக்கப்பட்டது.

இது இவ்வாறு இருக்கையில், முதல் 5விக்கெற் இணைப்பாட்ட சாதனையும் இந்திய அணி வசம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(மேலதிக விபரங்களுக்கு 'இணைப்பாட்ட சாதனைப் பட்டியல்' அட்டவணையைப் பார்க்கவும்).

## முதலாவது விக்கெற் இணைப்பாட்டம்

24 ஒக்டோபர் 2001. ஒருநாள் கிரிக்கெற் போட்டியின் 1764 ஆவது போட்டி. 'STANDARD BANK TRIANGULAR TOURNAMENT' இன் 9 ஆவது போட்டி பான் மைதானத்தில் இந்திய–கென்ய அணிகள் மோதுகின்றன.

இப்போட்டியிலேயே முதலாவது விக்கெற் இணைப்பாட்டமாக 258 ஓட்டங்கள் பெறப்பட்டது. இச்சாதனைக்கு உரித்துடையவர்கள் சௌரவ் கங்குலி மற்றும் சச்சின் டெண்டுல்கர் இருவருமே.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது இந்தியஅணி. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக கங்குலியும் டெண்டுல்கரும் களம் நுழைகின்றனர்.

இருவரும் இணைந்து கென்ய பந்து வீச்சாளர்களைத் துவம்ஷம் செய்கின்றனர். பவுண்டரிகள், சிக்ஸர்கள் என வான வேடிக்கை காட்டப்படுகின்றது. 41.4 ஓவரில் அணியின் மொத்த ஓட்ட எண்ணிக்கை 258ஆக இருக்கையில் இணைப்பாட்டத்தை கென்ய அணியின் ஒடுயோ பிரிக்கின்றார். 124 பந்துகளை எதிர்கொண்டு 7 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக 111 பெற்ற நிலையில் கங்குலி, ஒடுயோ வீசிய பந்தை பட்டேலிடம் பிடிகொடுத்து வெளியேறுகிறார்.

இப்போட்டியில் கங்குலிக்கு துணையாக நின்ற டெண்டுல்கர் 132 பந்துகளை எதிர்கொண்டு 17 பவுண்டரிகளுடன் 146 ஓட்டங்களைப் பெற்றார். (இவர் 43.4 ஓவரில் அணியின் மொத்த ஓட்ட எண்ணிக்கை 270 ஆக இருக்கையில் ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது).

இருவரினதும் நிதானமான அதிரடியான துடுப்பாட்டம் மற்றும் செவோக்கின் அதிரடியான துடுப்பாட்டம் (23 பந்துகள், 7X4+3X6=55) என்பவற்றின் காரணமாக இந்தியா 3 விக்கெற் இழப்பிற்கு 351 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கென்ய அணி 165 ஓட்டங்களைப் பெற்று 186 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

## இரண்டாவது விக்கெற் இணைப்பாட்டம்

இந்திய– நியூஸிலாந்து அணிகள் (1523 ஆவது போட்டி) ஹைதராபார்த் மைதானத்தில் 8ஆம் திகதி நவம்பர் மாதம் 1999 ஆம் ஆண்டு அன்று மோதுகின்றன.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்திய அணியின் சார்பில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக கங்குலி மற்றும் டெண்டுல்கர் ஆகியோர் களம்நுழைகின்றனர்.

1.4 ஓவரில் அணியின் ஓட்ட எண்ணிக்கை 10ஆக இருக்கையில் 4 ஓட்டங்களைப் பெற்றிருந்த கங்குலி, ரண் அவுட் முறையில் ஆட்டமிழந்து வெளியேறுகிறார்.

அடுத்துக் களம் நுழைந்த ராகுல் ராவிட் டெண்டுல்கருடன் இணைந்து புதிய சாதனைக்கு இட்டுச் செல்கின்றனர்.

பந்துகள் நாலாதிசையும் பறக்கின்றன. நியூஸிலாந்து அணியினர் விழி பிதுங்கி நிற்கின்றனர். இந்நிலையில் 47.6 ஓவராக இருக்கையில் 196 நிமிடங்கள் களத்தில் நின்று 153 பந்துகளை எதிர்கொண்டு 15 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 153 ஓட்டங்களைப் பெற்றிருந்த ராவிட், கெய்ன்ஸின் பந்தினை எதிர்கொண்டு பிளமிங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து வெளியேறுகிறார்.

இந்நிலையில் அணியின் ஓட்ட எண்ணிக்கை 341. இருவரும் இணைந்து தமக்கிடையே 331ஓட்டங்களைப்பகிர்ந்து இணைப்பாட்டத்தில் புதிய சாதனை படைத்தனர். இதுவே கிரிக்கெற் வரலாற்றில்அதிகூடிய இணைப்பாட்ட சாதனையாகும்.

இதேவேளை, ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களம் நுழைந்த டெண்டுல்கர் இறுதிவரை ஆட்டமிழக்காமல் 186 ஓட்டங்களை (221 நிமிடங்கள், 150 பந்துகள், 20X4, 3X6) பெற்றார்).

இதன் காரணமாக இந்திய அணி 50 ஓவ ரில் 2 விக்கெற்றினை இழந்து 376 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 202 ஓட்டங்களைப் பெற்று 174 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ஒருநாள் கிரிக்கெற் போட்டி– பந்துவீச்சு... (சென்றவாரத் தொடர்ச்சி...)

## ஹட்ரிக் (HAT TRICKS)

ஒருநாள் கிரிக்கெற் போட்டியில் ஹட்ரிக் கைப்பற்றிய வீரர்களை இங்கு பார்ப்போம்.

| | | | |
|---|---|---|---|
| ஜலல்–உட்–டின் | பாக் எதிர் அவுஸ் | ஹைதராபார்த் | 20/09/1982 |
| வி.றெய்ட் | அவுஸ் எதிர் நியூ | சிட்னி | 29/01/1986 |
| சி.சர்மா | இந் எதிர் நியூ | நாக்பூர் | 31/10/1987 |
| வஸீம் அக்ரம் | பாக் எதிர் மேற் இந் | சார்ஜா | 14/10/1989 |
| வஸீம் அக்ரம் | பாக் எதிர் அவுஸ் | சார்ஜா | 04/05/1990 |
| கபில்தேவ் | இந் எதிர் இல | கொல்கத்தா | 04/01/1991 |
| ஏ.ஜாவிட் | பாக் எதிர் இந் | சார்ஜா | 25/10/1991 |
| டி.மொறிஸன் | நியூ எதிர் இந் | நாக்பூர் | 25/03/1994 |
| வக்கார் யூனிஸ் | பாக் எதிர் நியூ | கிழக்கு லண்டன் | 19/12/1994 |
| சக்லைன் முஷ்தாக் | பாக் எதிர் சிம் | பெஷாவர் | 03/11/1996 |
| இ.பிறாண்டெஸ் | சிம் எதிர் இங் | ஹராரே | 03/01/1997 |
| ஏ.ஸ்ரூஆர்ட் | அவுஸ் எதிர் பாக் | மெல்பேர்ண் | 16/01/1997 |
| சக்லைன் முஷ்தாக் | பாக் எதிர் சிம் | ஓவல் | 11/06/1999 |
| சமிந்தவாஸ் | இல எதிர் சிம் | கொழும்பு | 08/12/2001 |
| முஹமட் சமி | பாக் எதிர் மேற்இந் | சார்ஜா | 15/02/2002 |
| சமிந்தவாஸ் | இல எதிர் பங் | பைற்றமறிஸ்பேரிக் | 14/02/2003 |
| பிரெட்லீ | அவுஸ்எதிர்கென்யா | டேர்வன் | 15/03/2003 |
| ஜேம்ஸ் அண்டர்ஸன் | இங் எதிர் பாக் | ஓவல் | 20/06/2003 |
| ஸ்ரீவ் ஹார்மிஸன் | இங் எதிர் இந் | நொட்டிங்காம் | 01/09/2004 |
| சி.லாங்வெல்ட் | தெ.ஆபி எதிர் மேற்இந் | பர்படொஸ் | 11/05/2005 |

**NOTE:-**

*பாகிஸ்தானின் முன்னாள் அணித்தலைவரும் வேகப்பந்து வீச்சாளருமான வஸீம் அக்ரம் இதே அணியின் முன்னாள் நட்சத்திர சுழற்பந்துவீச்சாளர் சக்லைன் முஷ்தாக் மற்றும் இலங்கையணியின் வேகப்பந்து வீச்சாளர் சமிந்தவாஸ் ஆகியோர் தலா இரண்டு முறை ஹட்ரிக் கைப்பற்றி சாதனை படைத்துள்ளனர்.

* இதேவேளை பாகிஸ்தான் அணியின் ஏ.ஜாவிட் குறைந்த வயதில் –19 வயது, 81 நாட்கள் ஹட்ரிக் கைப்பற்றி சாதனை படைத்துள்ளார்.

## நோயல்

## இணைப்பாட்ட சாதனைப் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1ST - 258 | சௌரவ் கங்குலி & சச்சின் டெண்டுல்கர் | இந் எதிர் கென்யா | 2001/02 |
| 2ND - 331 | ராகுல் ராவிட் & சச்சின் டெண்டுல்கர் | இந் எதிர் நியூ | 1999/00 |
| 3RD - 237 | ராகுல் ராவிட் & சச்சின் டெண்டுல்கர் | இந் எதிர் கென்யா | 1999 |
| 4TH - 275 | முஹம்மட் அஷாருதின்& அஜெய் ஜடேஜா | இந் எதிர் சிம் | 1997/98 |
| 5TH - 223 | அஜெய் ஜடேஜா & முஹமட் அஷாருதின் | இந் எதிர் இல | 1997 |
| 6TH - 161 | எம்.உடும்பே & ஏ.வட்கெர் | கென்யா எதிர் இல | 1999 |
| 7TH - 130 | கீர்த் ஸ்ரீக் & அன்டி பிளவர் | சிம் எதிர் இங் | 2001/02 |
| 8TH - 119 | ஷேன் வோர்ண் & பி.றிவில் | அவுஸ் எதிர் தென்ஆபி | 1993/94 |
| 9TH - 126 | கபில்தேவ் & எஸ்.கிர்மானி | இந் எதிர் சிம் | 1983 |
| 10TH - 106 | விவிலியன்றிச்சர்ட்ஸ் & எம்.கோல்டிவ் | மேற்இந் எதிர் இங் | 1984 |

(தொடரும்....)

## புதிதாக 4 மேல் நீதிமன்றங்கள் அமைக்க அரசு தீர்மானம்!

(கொழும்பு)

நான்கு புதிய மேல் நீதிமன்றங்களை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புதிய மேல் நீதிமன்றங்கள் அமைக்கப்படவேண்டும் என்று நீதி மறுசீரமைப்பு அமைச்சர் அமரசிறி தொடங்கொட அமைச்சரவைக்கு சமர்ப்பித்த யோசனைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலநறுவ, எம்பிலிபிட்டிய மற்றும் புத்தளம் நகரங்களில் 3 மேல் நீதிமன்றங்களும், போதைப்பொருள் தொடர்பான வழக்கு விசாரணைகளை மேற்கொள்ள வெலிக்கடைச் சிறைச்சாலையில் ஒரு மேல் நீதிமன்றமும் அமைக்கப்படவுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குடியகல்வு, குடிவரவு சட்டமூலத்தில் திருத்தம் செய்யவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கிடையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கோரிக்கைக்கு அமைய வாகனம் ஒன்றை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கவும் அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த–9)

## பஸ்சேவை

யாழ்ப்பாணத்தில் தற்போது பாடசாலைகள் ஆரம்பிக்கும் நேரத்துக்கு அமைவாகவே பாடசாலை பஸ் சேவைகள் இடம் பெறும் என இலங்கை போக்குவரத்து சபையின் வடக்கு செயலாற்று முகாமையாளர் செ.கமலநாதன் தெரிவித்துள்ளார்.

தற்போது காலை 8 மணிக்கு பாடசாலைகள் ஆரம்பமாகின்றன. இதற்கேற்ற வகையில் பாடசாலை பஸ்கள் சேவையில் ஈடுபடும் எனவும் பாடசாலை அதிபர்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க–9)

## நாளை வரை விண்ணப்பிக்கலாம்

குவைத் நஷ்ட ஈட்டுத் திட்டத்துக்கு விண்ணப்பிப்பதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் நாளை திங்கட்கிழமையுடன் முடிவடைகிறது.

நஷ்ட ஈட்டுக்கான விண்ணப்பங்களை ஏற்கனவே அனுப்பிய நபர்கள் இன்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

2000 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட மதிப்பீட்டின்படி மேலும் 388 பேர் நஷ்ட ஈட்டைப் பெறுவதற்கு தகுதியுடையவர்கள். இவர்களில் நஷ்ட ஈட்டைப் பெறாத 16 பேரும் பணியகத்திற்கு சமூகமளிக்க வேண்டும் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் கேட்டுள்ளது. (க–7)

உள்நாட்டு யுத்தமோ, வெளிநாட்டு யுத்தமோ எதுவாயிருந்தாலும் அதிலிருந்து தப்ப வேண்டும். ஒருவரோடு ஒருவர் கொள்ளும் சமாதானமும் நல்லெண்ணமுமே சிறந்தன.

-பிளேட்டோ

# வலம்புரி

## சமாதானத்தைக் குழப்புபவர்களை சட்டத்தின் முன் தண்டிக்க வேண்டும்

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் மற்றும் சமாதான முயற்சிகளுக்குக் குந்தகம் விளைவிப்பவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி அவர்களைத் தண்டிக்க வேண்டும். அப்போதுதான் இந்த நாட்டில் சமாதானத்தை அடைய முடியும்.

குறிப்பாக சமாதான அனுசரணைப் பணியில் ஈடுபடும் நோர்வேக்கெதிராக கருத்துத் தெரிவிப்பவர்கள் - நோர்வேயை வெளியேறுமாறு கோஷம் போடுபவர்கள் நாட்டின் அமைதிக்கும் சமாதான சூழ்நிலைக்கும் குந்தகம் விளைவிக்கின்றார்கள்.

எனவே இவர்கள் நாட்டின் குழப்ப நிலைக்கும் உயிர் மற்றும் பொருள் அழிவிற்கும் உடந்தையாகவிருக்கின்றார்கள் என்ற அடிப்படையில் அதிகூடிய தண்டனை வழங்கப்படுவதோடு இத்தகையவர்கள் அரசியலில் ஈடுபடுவதைத் தடுக்கவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

எனினும் இத்தகைய நடவடிக்கைகளை எடுப்பதற்கு உருப்படியான அரச தலைமை நாட்டில் இல்லாமை பெரும் குறைபாடாகும். சமாதான விரோத சக்திகளோடு கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைத்து விட்டு தண்டனை வழங்குவது என்பது முடியாத காரியமே.

அதிலும் சமாதான அனுசரணைப் பணியில் ஈடுபட்டுள்ள நோர்வேயை வெளியேற்றுதல், யுத்தநிறுத்த உடன்படிக்கையினை மாற்றியமைத்தல் என்னும் உடன்பாடுகளுடன் ஒத்துப்போவதாக ஒப்பமிட்டுவிட்டு பின்னர் கூட்டுச் சேர்ந்தவர்களுக்குத் தண்டனை வழங்கும் தற்துணிவு ஆட்சியாளர்களுக்கு இம்மியும் வராது என்பது உறுதி.

இதேவேளை இலங்கையின் ஒருமைப்பாட்டை, அதன் இறைமையைக் கட்டிக்காப்பேன் என்றும் அதன் பிரிவிடலுக்கு ஆதரவளிக்க மாட்டேன் என்றும் சத்தியப்பிரமாணம் செய்யும் சட்டமூலம் மட்டும் அவை புகுந்து அரங்கேறிவிட்டது.

ஒரு நாட்டை கூறுபோடுவதற்கு ஆதரவளிக்க மாட்டேன் என்றால் அரசும் விடுதலை புலிகளும் நோர்வேயின் அனுசரணையின்றி பேச்சு நடாத்தி எட்டப்படும் தீர்வுக்கு நாட்டின் இறையாண்மை கருதியும் நிலைத்த சமாதானத்தை இலக்காகக் கொண்டும் பரிபூரண ஒத்துழைப்பு வழங்குவேன் என்றும் அதற்கெதிராக பேசவோ குரல் கொடுக்கவோ மாட்டேன் என்றும் உறுதி கூறிக்கொள்ளலாமல்லவா?

ஆனால் அதுதான் நடக்கப்போவதில்லை. ஏனெனில் இங்குதான் இனரீதியான சட்டமூலங்களின் உருவாக்கம் மேலோங்குகின்றது.

அதாவது, இலங்கையைக் கூறுபோடுவதை தடுப்பதற்கு தமிழர்களிடம் இருந்து சத்தியப் பிரமாணம் பெறுவது ஆட்சியாளர்களுக்குத் தேவையாகவிருந்தது. அதனால் அந்த சட்டமூலம் அமுலாக்கத்திற்கு உட்பட்டுவிட்டது.

மாறாக சமாதானத்திற்கு, சமாதான முயற்சிகளுக்கெதிராக கோஷம் போடுவது குற்றம் என்ற அடிப்படையிலான சட்டமூலத்தை அமுலாக்கினால் அதனால் பாதிப்படையப் போபவர்கள் பெரும்பான்மையின பேரினவாத சக்திகளும் பௌத்த பிக்குகளுமே ஆவர்.

எனவே அத்தகைய சட்டமூலம் பற்றி ஆளும் தரப்பினர் நினைப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் ஒருபோதும் முன்வரப் போவதில்லை.

ஆயினும் இந் நிலைமையினை மாற்றியமைத்து சட்டமூலம் என்பது ஒட்டுமொத்தமான மக்களுக்குரியது என்னும் மனப்பாங்கு ஏற்பட்டால் சமாதானம் சட்டத்தின் ஊடாக ஏற்படுவது உறுதியாகிவிடும்.

# இயல்பு நிலைமையை புலிகள்தான் ஏற்படுத்த வேண்டும் -பாலித கோகன

(கொழும்பு)

**வடக்கு-கிழக்கில் இயல்புநிலைமையை தமிழீழ விடுதலைப்புலிகள் தான் ஏற்படுத்த வேண்டும் என்று அரசாங்கம் கூறியுள்ளது. தமிழர் தாயகத்தில் இயல்பு நிலைமை உருவாக்கப்பட்டால் தான்பேச்சுக்கள் சாத்தியம் என்று தமிழீழ விடுதலைப்புலிகள் வலியுறுத்தி வருகின்றனர்.**

**ஆனால் விடுதலைப் புலிகள்தான் இயல்பு நிலைமையை உருவாக்க வேண்டும் என்று சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கோகன பதிலளித்துள்ளார்.**

றொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்துக்கு நேற்று முன்தினம் அவர் அளித்த நேர்காணலின் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் இச்செய்தி நிறுவனத்துக்கு அமைதிப் பேச்சுக்களைப் பற்றி கருத்துத் தெரிவிக்கையில்,

பேச்சுக்கள் நடைபெறாது என்று நான் கூறமாட்டேன். சமாதான செயலகத்தின் பணிப்பாளர் என்ற முறையில் பேச்சுக்கள் கண்டிப்பாக நடைபெறும்

அரசாங்கம் பொறுமையின் எல்லையில் நின்று செயற்படுகிறது. ஏனெனில் விடுதலைப் புலிகளை ஜெனீவாப் பேச்சு மேசைக்குக்கொண்டுசெல்ல வேண்டும்.

இயல்பு நிலை திரும்பாதவரை பேச்சுக்களுக்கான சூழ்நிலை இல்லை என்று விடுதலைப் புலிகள் கூறுகின்றனர். யார் இயல்பு நிலைமையை ஏற்படுத்த வேண்டும்.

எங்களைப் பொறுத்தவரை இயல்பு நிலைமை என்பது நாளாந்தம் கிளைமோர் கண்ணிவெடி தாக்குதல்கள் இல்லாத, பொதுமக்கள் சந்தைகள் மீது கைக்குண்டுகள் வீசப்படாத, பொதுமக்கள் கொல்லப்படாத நிலைமையைத்தான் இயல்பு நிலைமை என்கிறோம்.

நாளாந்தம் ஆத்திரமூட்டும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட போதும் அமைதிப் பேச்சுக்கள் நடைபெறுவதற்காக உலகில் எந்த ஒரு நாடும் இப்படியாக வளைந்து கொடுத்ததாக காணமுடியாது.



கிழக்குப் பிரதேசத்தில் கருணாகுழுவினருடன் இராணுவத்துக்கோ அரசாங்கத்துக்கோ எதுவித தொடர்பும் இல்லை. கிழக்குப் பிரதேசம்முழுவதும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லை.

அப் பிரதேசத்தில் பாரிய வனப்பகுதிகள் உள்ளன. அவைஎமது கட்டுப்பாட்டில் இல்லை ஆகையால் அங்கே சில ஆயுதக் குழுக்கள் இருப்பதற்கான சாத்தியங்கள் உண்டு. நோர்வே சிறப்புப் பிரதிநிதி ஜோன் ஹன்சன் பௌயரின் முயற்சிகள் இனியும் தோல்வியடையுமேயானால் விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கம் தான் அழுத்தம் கொடுக்க வேண்டும். விடுதலைப் புலிகள் பேச்சுக்களிலிருந்து விலகினால் கனடாவைப் போல் ஐரோப்பிய ஒன்றியமும் அவர்கள் மீது தடை விதிக்க வேண்டும்.

விடுதலைப்புலிகளை பேச்சு மேசைக்குக் கொண்டு செல்ல இத் தகைய அனைத்துசர்வதேசசமூக அழுத்தங்களும் கொடுக்கப்படவேண்டும் என்றார்.

(ஞ)

# பேச்சுக்குவராமல் புலிகள் இழுத்தடிப்பது கவலைக்குரிய விடயம் என்கிறது அரசு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதற்கு தொடர்ந்தும் இணக்கம் தெரிவிக்காமை மற்றும் அவர்களின் வேண்டுகோள் போன்ற காரணங்களினால் ஜெனீவாப்பேச்சுவார்த்தை பிற்போடப்பட்டமை தொடர்பாக அரசாங்கம் கவலை தெரிவித் துள்ளது.

பாதுகாப்புப்படையினரையும் பொதுமக்களையும் இலக்கு வைத்து குண்டுத் தாக்குதல்கள் நடாத்தப்படுகின்றமை மிகவும் கவலைக்குரிய விடயமெனவும் அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும் தாம் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை மூலமான அரசியல்தீர்வு குறித்து அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும்,

முதல் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் முன்னரும் பின்னரும் விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதல்கள் தொடர்பாக கவனம் செலுத்தியுள்ளதாகவும் அரசாங்கம் நேற்று முன்தினம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இத் தாக்குதல்களின் தன்மையினைப் பார்க்கும் போது விடுதலைப் புலிகளே இத் தாக்குதலுக்கு பொறுப்பானவர்கள் என்பது புலப்படுவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பொதுமக்களையும் நிராயுதபாணிகளாக இருக்கும் பாதுகாப்புப் படையினரையும் இலக்கு வைத்து யுத்த நிறுத்த ஒப்பந்தத்தினை மீறும் தாக்குதல்களினை மேற்கொள்ள வேண்டாம் என தாமும் சர்வதேச சமூகமும் விடுதலைப் புலிகளிடம் விடுத்த வேண்டுகோளை கவனத்தில் கொள்ளாமல் புறந்தள்ளியமை கவலைக்குரிய விடயமாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஜெனீவாப்பேச்சுவார்த்தையில் இருந்து விலகிய போதும் தொடர்ந்தும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தினை பின்பற்றுவதற்கு எடுத்துள்ள தீர்மானத்தினை அரசாங்கம் வரவேற்கின்றது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை வழங்குவதற்கு நோர்வேப் பிரதிநிதிகளும் உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைமை வகிப்பவர்களும் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு அரசாங்கம்தொடர்ந்தும் தனது ஒத்துழைப்பினை வழங்கும் எனவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சு-4)

# விதவைகளின் மறுமணத்தை ஊக்குவிக்க ஓய்வூதியம்

(கொழும்பு)

நாட்டில் தற்போது நடைபெற்று வரும் அசாதாரண சூழ்நிலை காரணமாக பெண்கள் பலர் விதவைகளாகி வருகின்றனர்.

இத்தகைய விதவைகள் மறுமணம் செய்தால் அவர்கள் பெற்ற ஓய்வூதியக் கொடுப்பனவு நிறுத்தப்படுகின்றது.

இதனால் அவர்கள் மறுமணம் செய்ய தயக்கம் காட்டுகின்றனர். எனவே இதனைத் தவிர்த்து மறுமணத்தை ஊக்குவிக்கும் பொருட்டு அவர்கள் பெற்ற ஓய்வூதியத்தில் ஒரு பகுதியாவது வழங்கப்படவேண்டும் என அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் மட்டக்களப்பு ஓய்வூதியர் சேமநல நலன் புரிச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டது.

ஓய்வூதியப் பிரமாணங்களுக்கு அமைய 25 வருட சேவையின் பின் ஆசிரியைகள், தாதிய உத்தியோகத்தர்கள், பெண் தொலைபேசி இயக்குனர்கள் சேவையிலிருந்து ஓய்வுபெற இடமளிக்கப்பட்டுள்ளது.

இச்சலுகை சகல பெண் அரச ஊழியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு முறையான பின் உரித்தாளர் இல்லாத விடத்து அவரின் விவாகம் ஆகாத பெண்பிள்ளைகளுக்கு வயதெல்லை இன்றி ஓய்வூதியம் வழங்க வேண்டும்.

ஓய்வூதிய முரண்பாட்டை நீக்குவதற்காக வெளியிடப்பட்ட 2/2006 இலக்க ஓய்வூதிய திணைக்கள சுற்று நிருபத்தின் டி பிரிவில் கூறப்பட்டுள்ள ஆகக்குறைந்த சேவைக்காலமாகிய 25 வருடத்தைக் கவனத்தில் கொள்ளாது யாவருக்கும் ஓய்வூதிய முரண்பாடு நீக்கப்பட வேண்டும்.

அத்துடன் முரண்பாட்டுக்கொடுப்பனவு 2004 ஆம் ஆண்டு தொடக்கம் முழுக்கொடுப்பனவும் ஒரே தடவையில் அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும் வாழ்க்கைச் செலவை ஈடு செய்வதற்காக அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை அதிகரிக்கும் போது அதிகரிக்கப்படும் அதே தொகை ஓய்வூதியம் பெறுப்பவர்களுக்கும் வழங்கப்படவேண்டும் என்பன போன்ற தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

(சு-9)

# போட்டிப்பரீட்சை

(கொழும்பு)


கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக் களத்தில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் உரியவிண்ணப்பதாரிகளுக்கு ஏற்கனவே தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(சு-9)

## தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்



நாம் கடவுளைத் தேடுவது போல ஆயிரம் மடங்கு அதிக அளவில் கடவுளும் நம்மைத் தேடிக் கொண்டிருக்கிறான். நாம் கடவுளைத் தேடுவது என்பது சிறுவன் தன் தாயின் முகவரியையோ அவளது அடையாளங்களையோ கூற முடியாததைப் போன்றது. ஆனால் கடவுள் நம்மைத் தேடுவது தாய் தன் மகனை எப்படியும் தேடிப் பிடிப்பதற்குச் சமம்.

# சமாதான செயலகப் பணிப்பாளர் பதவியில் இருந்து பாலித நீக்கம்?

(கொழும்பு)

இலங்கை அமைதி முயற்சிகளை சீர்குலைக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார் என்ற குற்றச்சாட்டில் அரச சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கோகன்ன நீக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அதேபோல் நோர்வேயை கடுமையாக விமர்சனம் செய்த அமைச்சர் மங்கள சமரவீரவையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.

இலங்கை சமாதான செயற்பாடுகளில் அனுசரணையாளர்களாகவிருக்கும் நோர்வே அரசின் செயற்பாடுகள் குறித்து வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்திருக்கும் கருத்துக்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

நோர்வேஅரசாங்கம் பற்றி வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருக்கும் கருத்து தொடர்பாக அந்நாட்டு அரசாங்கம் மகிந்தவுக்கு எழுத்து மூலம் அறிவித்திருப்பதையடுத்தே அவர் வெளிவிவகார அமைச்சரை எச்சரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோர்வே அனுப்பி வைத்திருக்கும் கடிதத்தில் அந்நாட்டு சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்மே கைச்சாத்திட்டுள்ளார். சில வாரங்களுக்கு முன்னர் கொழும்பு ஆங்கில ஊடகத்திற்கு அமைச்சர் மங்கள சமர வீர வழங்கிய நேர்காணலில் பல இடங்களில் நோர்வே அனுசரணையாளர் பற்றி கடும் விமர்சனங்களைத் தெரிவித்திருந்தார்.

வெளிவிவகார அமைச்சர் இத்தகைய கருத்துக்களை வெளியிடுதல் அரசாங்கத்தின் கருத்துக்களுடன் நேரடியாக சம்பந்தப்படுவதனால் அதற்குப் பதிலளிக்கும் வகையில் நோர்வே அரசாங்கம் கடும் நிலைப்பாட்டுடன் மகிந்தவுக்கு இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளது. (சு)

## வடமராட்சி கிழக்கில் மீனவர்மீது துப்பாக்கிச் சூடு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடற்பரப்பில் கடற்றொழில் செய்து கொண்டிருந்த தொழிலாளர்மீது நேற்று காலை 7.20 மணியளவில் கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

கட்டைக்காடு முள்ளியானைச் சேர்ந்த ஜெனிஸ் வெனிஸ்ரன் (வயது-41) என்பவரே இச் சம்பவத்தில் கையில் காயமடைந்தவராவார்.

தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற இவர் இச் சம்பவம் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

மேலும் இச் சம்பவத்தில் சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான வலைகளும் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

# சூட்டிற்கு இலக்கான வேட்பாளர் நேற்று அதிகாலை உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்து யாழ்.மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தவர்நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.



கரைநகர் பிரதேச சபைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வேட்பாளராக நியமிக்கப்பட்ட இராசரத்தினம் வில்வராத்தினம் (வயது-37) என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

கடந்த வியாழக்கிழமை இவர் காரைநகரில் உள்ள அவரது வீட்டின் வெளிக் கதவை மூடுவதற்காக வெளியே சென்றபோது அங்கு காத்துநின்றவர்களால் இவரின் மீது சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

ஒன்பது துப்பாக்கிரவைகள் இவரது தலை, நெஞ்சு மற்றும் கைகளில் துளைத்து உயிராபத்தான நிலையில் இவர் யாழ். மருத் துவ மனையில் சேர்க்கப்பட்டுசிகிச்சைபெற்று வந் தார்.

இந்நிலையில் சிகிச்சை பயனளிக்காது நேற்று அதிகாலை 3 மணியளவில் அவர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இவர் சவுதி நாட்டில் தொழில் புரிந்து விட்டுகடந்த இரண்டு வருடங்களுக்கு முன்புதான் நாடு திரும்பியிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (சு-4)

# விரைவில் பொதுத் தேர்தலை நடத்த ஜனாதிபதி மகிந்த தீவிர ஆலோசனை

(கொழும்பு)

நாடாளுமன்ற பொதுத் தேர்தலை விரைவில் நடத்துவது தொடர்பாக அமைச்சர்கள் சிலர் அரசாங்கத்திற்கு யோசனை தெரிவித்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆறுமுகன் தொண்டமான், ஹக்கீம், பெ.சந்திரசேகரன் ஆகியோர் அரசாங்கத்துடன் இணைந்த பின்னர் இத் தேர்தலை நடத்தலாம் என்று யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதானச் செயற்பாடுகளைச் பலப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் இந்த நடவடிக்கையினை எடுப்பதற்கு திட்டமிட்டிருப்பதாகவும் அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக மகிந்த ராஜபக்ஷவுடன் அமைச்சர்கள் சிலர் விரிவான பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார். (சு-4,5)

# சு.கவின் தலைவர் பதவி ஜனாதிபதி மகிந்தவுக்கு?

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவிக்கு நியமிக்க கட்சியின் தலைவர் சந்திரிகா குமாரதுங்க இலங்கை திரும்பியவுடன் முடிவெடுக்கப்படவுள்ளது.

சந்திரிகா நாடு திரும்பியவுடன் கட்சியின் செயற்குழு கூடவுள்ளதாக அக் கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்சித் தலைமைக்கு மகிந்தவை நியமிப்பதற்கான யோசனை இரண்டு வாரங்களுக்கு முன்னர் நடைபெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது.

அப்போது கருத்துத் தெரிவித்த மகிந்த ராஜபக்ஷ, சந்திரிகா குமாரதுங்க நாட்டில் இல்லாத நேரம் தலைமைப் பதவியை ஏற்பது உகந்ததல்ல எனக் கூறியுள்ளார்.

இதேவேளை சுதந்திரக் கட்சித் தலைவர் பதவியை மகிந்த ராஜபக்ஷ ஏற்பதற்கு அமைச்சர் மங்கள சமரவீர கடும்எதிர்ப்புத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (சு-4)

## புலிகளின் பயணத்திற்கு ஹெலி...

ஜெனீவாப் பேச்சில் கலந்து கொள்வதற்கு முன்னதாக தமது கிழக்கு மாகாணத் தளபதிகளை கிளிநொச்சிக்கு அழைத்து வருவதற்கு விடுதலைப்புலிகள் ஹெலி வசதி ஏற்படுத்தி தருமாறு அரசைக் கோரியிருந்தனர். அதற்கு அரசு மறுப்புத் தெரிவித்திருந்தது.

இதனையடுத்து நாளை ஜெனீவாவில் நடைபெறவிருந்த சமாதானப் பேச்சு இடை நிறுத்தப்பட்டது. இந்நிலையில் தனியார் ஹெலிகளைப்பெற்றுக் கொள்ளஅரசு இணங்கிய போதும் விடுதலைப்புலிகள் மறுப்புத் தெரிவித்தனர்.

அத்துடன் தமது கிழக்குத் தளபதிகளின் பயணத்திற்கு பத்துப் பேர் செல்லக் கூடிய ஹெலி ஒன்றைப் பெற்றுத் தருமாறு தூதுவர் பெளயர் ஊடாக அரசைக் கோரியிருந்தனர்.

அதற்கு அரசு, புலிகள் கோரியவாறு ஹெலியை வழங்குவதற்கு இணக்கம் தெரிவிப்பதாக அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் பாலித கோகன்ன தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பாக பாலித கோகன்ன தெரிவித்ததாவது, முன்னர் நாங்கள் தெரிவித்த தனியார் உலங்கு வானூர்தி பயணத்திற்கான ஏற்பாட்டை விடுதலைப்புலிகள் நிராகரித்துள்ளனர்.

ஆனால், தற்போது பத்துப் பேர் பயணிக்கக் கூடிய ஹெலியை தமது தளபதிகளின் பயணத்திற்குத் தர வேண்டும் என்று புலிகள் கேட்டுள்ளனர். இது சற்று சிரமமாகவிருக்கின்ற போதிலும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை எப்படியாவது நடத்த வேண்டும் என்பதற்காக நாம் அந்தக் கோரிக்கையை ஏற்பதாகவும் பாலித கோகன்ன தெரிவித்தார்.

கோகன்ன, பெளயர் சந்திப்பில் அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, ஹெலிய ரம்புக்வெல, அனுரபிரியதர்ஷன யாப்பா, ஜனாதிபதி மற்றும் வெளிநாட்டு அமைச்சர் ஆகியோரின் செயலாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான இரண்டாம் கட்ட ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னதாக புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதிகள் வன்னியில் உள்ள தமது தலைவர்களை சந்திப்பதற்கான பிரயாணத்திற்கு தனியார் உலங்கு வானூர்தியை பயன்படுத்தலாம் என்ற அரசாங்கத்தின் யோசனையை விடுதலைப்புலிகள் நிராகரித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (சு-4)

## முடிவுகள் எதுவுமற்ற...

ஹென்றிக்சனுடனான சந்திப்புக்கு அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மறுப்புத்தெரிவித்துள்ளார். இதனையடுத்து அவர் உடனடியாக கொழும்பு திரும்பினார்.

இதன் பின்னர் கண்காணிப்புக்குழுவின் தலைவர், அரச சமாதான செயலகப்பணிப்பாளர் பாலித கோகன்னாவை சந்தித்துப் பேசினார். விடுதலைப்புலிகளின் கிழக்குத் தளபதிகள் தமது தலைமைப் பீடத்தினை சந்திக்க முடியாத நிலைமையினை உருவாக்கி திட்டமிட்ட முறையில் இழுத்தடிப்புக்களை புலிகள் ஜெனீவாப் பேச்சுவார்த்தைக்கு செல்வதற்கு தடைகளை மகிந்த அரசு ஏற்படுத்தி வருவ தாக விடுதலைப்புலிகளுக்கு நெருங்கிய வட்டாரங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன. (சு)

## சீனன்குடாவில்...

சென்ற ஆயுததாரிகள் வீட்டுக்குள் நுழைந்து துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததில் அவரது மனைவி நல்லம்மா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.திருமலையில் ஊரடங்குச் சட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நேரத்தில் இப் படுகொலைச் சம்பவம் நடந்துள்ளது. இடது கண்ணிலும் நெற்றியிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு உள்ளான கந்தசாமி திருகோணமலை மருத்துவமனை அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு பின்னர் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக கொண்டு செல்லப் பட்டுள்ளார். (சு-5,4)

## கிளைமோர்...

இராணுவப் பிக்கப் வாகனம் கிளைமோர்தாக்குதலில் சிக்கியதில் இராணுவ மேஜர் தர அதிகாரி கொல்லப்பட்டுள்ளார்.

மேலும் 6 இராணுவச் சிப்பாய்கள் காயமடைந்து பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வெலிக்கந்தைப்பிரதேசத்தில் இருந்து சிங்கபுர இராணுவ முகாமை நோக்கி பி.ப.1.25 மணியளவில் பயணித்த இராணுவத்தின் வாகனமே கிளைமோர்த்தாக்குதலுக்கு இலக்கானது.

கொல்லப்பட்ட இராணுவ அதிகாரி இராணுவத்தின் கெமுனு படைப்பிரிவின் வேறு படைப்பிரிவைச் சேர்ந்த சரத் என்று சிறிலங்கா இராணுவத்தரப்பினர் தெரிவித்துள்ளனர். குறிப்பிட்ட இடத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது மற்றுமோர் கிளைமோர் கண்டெடுக்கப்பட்டதாக இராணுவம் தெரிவித்துள்ளது. (சு-4,9)


## திருமறைக் கலாமன்றம்
### நாடகப் பயிலகம்
## விண்ணப்பம் கோரல்

எமது மன்றத்தால் வருடாந்தம் நடத்தப்படுகின்ற நாடகப் பயிற்சி நெறிக்கான 2006 ஆம் ஆண்டுக்கான 13ஆவது புதிய பிரிவு எதிர் வரும் 14.05.2006 இல் ஆரம்பமாகவுள்ளது.

இப் பயிற்சி நெறியில் பயில்வதற்கு ஆண்,பெண் இரு பாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களுக்கும் அரங்கு தொடர்பான பயிற்சியைப் பெற விரும்புபவர்களுக்கும் நாடகமும் அரங்கியலையும் கற்கும் மாணவர்களுக்கும் பயனுடையதாக இப் பயிற்சி நெறியமையும்.

பயில விரும்புவோர் யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று 04.05.2006 இற்கு முன்னதாக ஒப்படைக்கவும்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(C-அ-383)

பொதுச் செயலாளர்,
திருமறைக் கலாமன்றம்.










இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.2 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.04.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.